பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2037 மார்கழி 22 சனிக்கிழமை (06.01.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 42

## விவசாய அலுவலர்கள் இருவர் கிளைமோர் தாக்குதலில் பலி!

### நெடுங்கேணியில் புலிகள் பகுதிக்குள் நேற்றுக்காலை சம்பவம்

கொழும்பு, ஜன.6

வவுனியாவில், நெடுங்கேணிப் பகுதியில் நேற்றுக்காலை 8.30 மணியளவில் விவசாயத் திணைக்களத்துக்குச் சொந்தமான வாகனம் ஒன்று கிளைமோர் கண்ணித் தாக்குதலில் சிக்கிச் சிதறுண்டது. அதில் பயணம் செய்த விவசாய உத்தியோகத்தர்கள் இருவர் உயிரிழந்தனர்; மூவர் காயமடைந்தனர். அவர்களில் இருவரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பிரதேசத்தினுள் இடம்பெற்றிருக்கும் இத் தாக்குதலுக்கு அரசுப் படைகளே பொறுப்பு என்று புலிகள் தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

பழ மரக்கன்றுகளை விநியோகிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த விவசாயத் திணைக்களத்தின் வாகனமே கிளைமோர் கண்ணியில் சிக்கியது என்று தெரிவிக்கப் படுகிறது.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ மேஜரும், 6 சிப்பாய்களும் மூடிய நிலையில் நீதிமன்றத்தில்!

கொழும்பு, ஜன. 06

விடுதலைப் புலிகளுக்கு துப்பு வழங்கி வந்தவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள ஒரு மேஜர் உட்பட ஏழு படையினர் நேற்று சீலையால் உடம்பு முழுவதும் மூடி மறைக்கப்பட்ட நிலையில் - யாரும் அவர்களைப் பார்த்து அடையாளம் கண்டுகொள்ளாத வகையில் - கொழும்பு மாஜிஸ்திரேட் நீதிமன்றுக்கு பலத்த பாதுகாப்புடன் அழைத்துவரப் பட்டனர்.

பிரதம நீதிவான் குசலா சரோஜினி வீரவர்த்தன முன்னிலையில் அவர்கள் ஏழு

(08 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்காவுக்கு எதிராக முஸ்லிம்கள் சீற்றம்!

கொழும்பு, ஜன.6

ஈராக்கின் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைனை மிகக் கொடூரமாகவும் இழிவாகவும் நடத்திதூக்கில் போட்டுக்கொன்ற செயலுக்காக அமெரிக்கா மீது இலங்கை முஸ்லிம்கள் தங்கள் சீற்றத்தை வெளிப் படுத்தியிருக்கின்றனர்.

நாட்டின் தலைநகரிலும், கிழக்கு மாகாணத்திலும், இதர பல இடங்களிலும் பள்ளிவாசல்களில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற விசேட ஜனாஸா தொழுகையை அடுத்து முஸ்லிம்கள் நடத்திய ஆர்ப்பாட்டங்களிலும், கண்டனப் பேரணிகளிலும் அமெரிக்க அதிபர் புஷ்ஷுக்கு எதிராக ஆத்திர உணர்வு கொப்பளித்தது. அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷின் கொடும்பாவிகளை தூக்கில் கட்டி தொங்கவிட்டும், அவற்றை தீக்கிரையாக்கியும் முஸ்லிம்கள் தங்கள் உணர்வை வெளிப்படுத்தினர்.

சதாம் ஹுசைன் தூக்கிலிடப்பட்டமையைக் கண்டித்து 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் நேற்றுக் கொழும்பில்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## பயணிகள் பஸ்ஸில் குண்டு வெடித்தது; ஐவர் உயிரிழப்பு, 50 பேர் காயம்!

### நிட்டம்புவவில் சம்பவம்; ஊரடங்கு அமுல்

கொழும்பு,ஜனவரி 6

கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த நிட்டம்புவவில் நேற்றுமாலை பயணிகள் பஸ் ஒன்றினுள் குண்டு வெடித்தது. அதில் ஐந்து பொதுமக்கள் பலியானதாகவும் சுமார் 50 பேர் காயமடைந்ததாகவும் முற்கொண்டு கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டது.

இது விடுதலைப் புலிகள் பொதுமக்களை குறிவைத்து நடத்திய தாக்குதலே என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

நேற்று மாலை 6.45 மணியளவில் நிட்டம்புவவில் இருந்து கிரிவுல்ல என்ற பகுதிக்குச் சென்றுகொண்டிருந்த பஸ்ஸிலேயே கலால்பிட்டி என்ற இடத்தில் இந்தக் குண்டுவெடிப்பு இடம்பெற்றது.

இதில் ஐந்து பொதுமக்கள் உயிரிழந்தனர்; 50 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களில் 10 பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

பஸ்ஸுக்குள் மறைத்து எடுத்துவரப்பட்ட குண்டே வெடித்திருக்கலாம் என்று நிட்டம்புவ பொலிஸார் தெரிவித்தனர். குண்டுவெடிப்பையடுத்து பஸ் தீப்பற்றி எரிந்தது. உடனடியாக பொலிஸாருக்கும் தீயணைப்பு படையினருக்கும் தகவல் கொடுக்கப்பட்டது. தீயணைப்புப் படையினர் சம்பவ இடத்துக்கு விரைந்து தீயை அணைத்தனர். காயமடைந்தவர்கள் அருகிலுள்ள வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் மூவர் நேற்றிரவு கொழும்பு மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர். குண்டுவெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து நேற்று இரவு 7 மணிமுதல் இன்று காலை 6 மணிவரை அப்பகுதியில் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டது. ''சிவிலியன்களைக் குறிவைத்து விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலே இது'' என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார். (த)

## பல்கலை. மாணவனை விடுவித்தால் மட்டுமே அதனை ஆரம்பிப்பது குறித்து தீர்க்கமான முடிவு

### மாணவர் ஒன்றியம் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,ஜன.6

காணாமற்போயுள்ள யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட இறுதி ஆண்டு மாணவன் அருணகிரிநாதன் நிருபராஜின் விடுதலை தொடர்பாக விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரையும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது.

அவரது விடுதலையை அடுத்தே பல்கலைக்கழச் செயற்பாடுகளை ஆரம்பிப்பது தொடர்பாக தீர்க்கமான முடிவுகளை எடுக்கமுடியும் என்றும் மேற்படி ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

இம் மாதம் 22 ஆம் திகதி எமது பல்கலைக்கழகச் செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சமயத்தில் எமது விஞ்ஞான பீட இறுதியாண்டு மாணவன் அருணகிரிநாதன் நிருபராஜ் காணாமற்போயுள்ள சம்பவம் எமது மாணவர்கள் மத்தியில் பெரும்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. தாளங்குடாவில் கிளைமோர்: அதிரடிப்படையினர் நால்வர் பலி!

### மற்றொரு சிப்பாயும் பொதுமகனும் காயம்

மட்டக்களப்பு மாவட்டம் தாளங்குடாவில் நேற்றுக்காலை 9.30 மணியளவில் நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் விசேட அதிரடிப்படையினர் நால்வர் உயிரிழந்தனர். மேலும் ஓர் அதிரடிப்படைச் சிப்பாயும் பொதுமகன் ஒருவரும் படுகாயமடைந்தனர்.

தாளங்குடா - கல்முனை வீதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினர் ஒன்றுகூடி நின்ற இடத்திலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

இந்தத் தாக்குதலையடுத்து அந்தப் பகுதியில் அதிரடிப்படையினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்தத் தேடுதலில் எவரேனும் கைது செய்யப்பட்டனரா என்பது குறித்த தகவல்கள் நேற்றுமாலைவரை வெளியாகவில்லை.(த)

## வவுனியாவில் பொலிஸார் மீது நேற்றும் தாக்குதல்; ஒருவர் பலி!

வவுனியா, ஜன. 06

வவுனியா பகுதியில் படையினர் மற்றும் பொலிஸாருக்கு எதிரான தாக்குதல்கள் தொடர்கின்றன. நேற்று முற்பகல் இடம்பெற்ற ஒரு தாக்குதலில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றொருவர் காயமடைந்தார்.

வவுனியா - மன்னார் வீதியில் 'செக்டர் 3' பகுதியில் நேற்றுமுற்பகல் 10.45 மணிக்கு இந்தச் சம்பவம் இடம்பெற்றிருப்பதாக வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி குமார சந்தநாயக்க தெரிவித்தார்.

தற்காலிக முகாமில் தங்கியிருந்த பொலிஸாரைக் குறிவைத்து கைத்துப்பாக்கியால் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதல் காரணமாக பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கொல்லப்பட்டார். காயமடைந்தவர் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் அநுராதபுரம் வைத்திய

(08 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் வவுனியா அலுவலகம் முற்றுகை!

### பணியாளர்கள் நால்வர் கைது! ஆவணங்கள் பொலிஸார் வசம்

கொழும்பு, ஜன.6

வவுனியா குருமன்காடு பகுதியில் செயற்பட்டு வந்த தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அலுவலகம் நேற்றுமுற்பகல் பொலிஸாராலும் அரச படையினராலும் முற்றுகையிடப்பட்டது. அங்கிருந்த இரு யுவதிகள் உட்பட நான்கு பணியாளர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். அலுவலகத்தில் தேடுதல் நடத்திய பொலிஸார் அங்கிருந்து ஆவணங்கள் அனைத்தையும் அள்ளி லொறி ஒன்றில் ஏற்றிச் சென்றனர் - என்று தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முற்பகல் 11.30 மணியளவில் பொலிஸாரும், படையினரும் இந்நடவடிக்கையை மேற்கொண்டனர் என்று தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அதிகாரிகள் கொழும்பில் தகவல் வெளியிட்டனர்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## வெலிக்கடையில் 2 பெண்கள் கைது!

கொழும்பு, ஜன.6

கிளைமோர் குண்டுகளை வைத்திருந்தனர் எனக் குற்றஞ்சாட்டிக் கைதுசெய்யப்பட்ட இரு ஊர்காவற்படையினர் வழங்கிய தகவலை அடுத்து புலிகளுடன் தொடர்புடைய இரு பெண்கள் கொழும்பு வெலிக்கடையில் கைது செய்யப்பட்டுள்ளனர் - என்று தெரிவிக்கப்படுகிறது.

இராணுவ அதிகாரிகளை இலக்கு வைத்து தாக்குதல் நடத்த புலிகளிடமிருந்து இரண்டு கிளைமோர் குண்டுகளையும்,

(08 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வியாவில் ஐயனார் கோயில்

### காரைநகர்.

## மகரஜோதிப் பெருவிழா

யாழ். மாவட்ட 18 ஆம் படி குருசாமி தாவடி அ.இந்துதாஸ் அவர்களின் ஆசியுடன் நிகழும் மங்களகரமான விய வருடம் 07.01.2007 ஞாயிற்றுக்கிழமை 9 மணிக்கு ஐயப்பெருமாளுக்கு மகரஜோதிப் பெருவிழா நடைபெற திருவருள் கூடியுள்ளது.

**கிரியைகள்**

சாஸ்தாபீடம்

**பிரம்மஸ்ரீ மகாதேவக் குருக்கள்**

தலைமையில் நடைபெறும்.

தாவடியூர் தானுவாசுதேவக்குருக்கள் தலைமையில் படிப்பூசை நிகழ்வு இடம் பெறும். குருசாமிகளையும், மாலை அணியப்பெற்ற சாமிகளையும் அடியார்கள் அனைவரையும் கலந்து ஐயப்பன் அருள் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

விசேட நாதஸ்வர, தவில் கச்சேரி இடம்பெறும்

| நாதஸ்வர வித்துவான்கள் | தவில் வித்துவான்கள் |
|---|---|
| N.K.K. பவப்பிரியன் | R. முருகானந்தம் (நடுவில்) |
| R. சிவகுமார் | B. நர்மதன் (மது) |
| K. நாகதீபன் | S. செந்தில்நாதன் |

அடியார்கள் அனைவரையும் மாகேஸ்வர பூசையில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

**அனுசரணை: கஜமுகன் ஹாட்வெயார்ஸ்**

வியாவில், காரைநகர். [சி-51782] ஆலய அறங்காவலர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**செல்வி இராஜேந்திரம் சர்மிலா**

யா/தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த இராஜேந்திரம் சியாமளாதேவி தம்பதியரின் செல்வப் புதல்வி சர்மிலா 2006ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 149 புள்ளிகளைப்பெற்று சித்தி அடைந்துள்ளார்.

பாராட்டி வாழ்த்துபவர்கள்:
அம்மம்மா, மாமா, பெரியம்மா, அக்காமார், அண்ணாமார், சித்தி, சித்தப்பா.

3ஆம் குறுக்குத் தெரு,
பருத்தித்துறை. [சி-51728]

## பாராட்டி வாழ்த்துகிறோம்



தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2006 இல் பரீட்சைக்குத் தோற்றிய யா/ அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலய மாணவன்

**செல்வன் தவேந்திரராஜா அனோஜன்**

161 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்து மாவட்ட மட்டத்தில் 51 ஆவது இடத்தையும் பாடசாலை மட்டத்தில் முதலாமிடத்தையும் பெற்றமையையிட்டு பாராட்டுவதுடன் எதிர்காலத்தில் பல்கலைக்கழகம் சென்று பட்டங்கள் பெற்று சிறந்து வாழ வாழ்த்துகிறோம். இவருக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த அதிபர், வகுப்பாசிரியர், ஏனைய ஆசிரியர்களையும் வாழ்த்துவதோடு நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஆனைப்பந்தி,
அல்வாய் கிழக்கு, அல்வாய். [சி-51747]
பெற்றோர், சகோதரர், உறவினர்கள்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ் .இந்து ஆரம்பப் பாடசாலையிலிருந்து 2006 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் 159 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த நித்தியானந்தன் றஞ்சனாதேவி தம்பதியரின் செல்வப் புதல்வன்

**நி.நிரோஜன்** (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை)

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு இவரை ஊக்கப்படுத்தி கல்வி கற்பித்த யாழ் இந்து ஆரம்ப பாடசாலை அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

30/3, வைமன் வீதி,நல்லூர் [65242] குடும்பத்தினர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2006 ஆம் ஆண்டு நடைபெற்ற 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற யா/ புனித சாள்ஸ் மகாவித்தியாலய மாணவர்களான



**செல்வன் ரவீந்திரன் பார்வையா** (143 புள்ளி)

**செல்வன் கஸ்ரன் ரவீந்திரா சுஜிந்தன்** (136 புள்ளி)

ஆகிய இருவரையும் பெரு மகிழ்வுடன் பாராட்டுவதோடு கல்வியில் மென்மேலும் சிறந்தோங்க வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் - யா/ புனித சாள்ஸ் ம.வி.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



*மண்டைதீவு ம.வி, யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவரும், யாழ். தேசிய கல்விக் கல்லூரி விரிவுரையாளருமான*

**மாசிலாமணி பிரபாகரன்**

Spl.Trd.(Eng), B.A, P.G.D.E, M.A. in Tr.Ed (Int.)

*அவர்கள் 28.11.2006 அன்று பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் M.A. in Tr.Ed (International) பட்டத்தினைப் பெற்றுக்கொண்டார். இவரை மேலும் பல உயர்வுகள் பெற்று பல்லாண்டுகாலம் சீரும் சிறப்புடன் வாழ திருவெண்காட்டு சித்தி விநாயகப் பெருமானை வேண்டி நிற்கின்றோம்.*

*யாழ்ப்பாணம். (65351)*
*கனி, கவி, அபி, உடன் அன்பு உறவுகள் நண்பர்கள்.*

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/ கல்வியங்காடு இந்து தமிழ்கலவன் பாடசாலை மாணவனும் யோகராசா தவமலர் தம்பதியரின் செல்வப் புதல்வனுமாகிய

**யோகராசா சாகனன்**

2006 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 153 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். இவரைப் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

கட்டப்பிராய்.
வாழ்த்துவோர்:
சித்தப்பாமார், சித்தி, மாமா, அத்தைமார்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/ மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலய மாணவி

**செல்வி விஜயவரதன் தர்ஷனா**

2006 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 148 புள்ளிகளைப் பெற்று பாடசாலை மட்டத்தில் 3ஆம் இடத்தில் சித்தியடைந்தமையையிட்டு மனதார வாழ்த்துவதுடன் இவர் பரீட்சையில் சித்திபெற ஊக்குவித்த வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள் மற்றும் தனியார் கல்வி நிலைய ஆசிரியர்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு அவர் மேலும் கல்வியில் சிறந்து விளங்கவேண்டுமென வாழ்த்துகின்றோம்.

மீசாலை வடக்கு,
கொடிகாமம்.
பெரியப்பா, பெரியம்மா, அம்மம்மா, நீலுச்சித்தி.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை 2006 இல் பரீட்சைக்குத் தோற்றிய

**செல்வி அனோஜா**

நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலையில் 161 புள்ளிகளைப் பெற்று பாடசாலை மட்டத்தில் முதலாமிடத்தையும் மாவட்ட மட்டத்தில் 51ஆவது இடத்தையும் பெற்றமைக்காக அவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவரது வெற்றிக்காக ஆக்கமும் ஊக்கமும் அளித்த அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

க.புவனேந்திரம் குடும்பம் (அப்பு மாமா).
(சி-51746)

### தவறி விட்டது

NPGI 7854 மோட்டார் சைக்கிளுக்குரிய ஆவணங்கள் 2006 டயரியுடன் யாழ்ப்பாணத்துக்கும் கொக்குவிலுக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள்

M.S.நவரட்ணம்,ஞான பண்டித வித்தியாலயசாலை அருகில் கொக்குவில் மேற்கு,

தொ.பே.: 222 5338 என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

### THE ROYAL COLLEGE OF JAFFNA

சுலபமான முறையில் ஆங்கிலத்தில் கதைக்கப்பயில தனித்தனி கவனம் கொடுக்கப்படும். By: விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 [302] கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம், பிளாக்வீதி, சங்கானை.

" THE ROYAL IS THE BEST"

## வேலையாள் தேவை

எமது நிறுவனத்தில் கடமையாற்ற ஆண், பெண் இருபாலாரும் தேவை நேரில் தொடர்பு கொள்ளவும்.

06.01.2007 சனி - 2.30 P.M.

**பொருளியற் கல்லூரி**
யாழ்ப்பாணம்.

### கடை இடம்மாற்றம்

சின்னக்கடையில் இயங்கி வந்த இலக்கம் 6 விகுவின் மாட்டிறைச்சிக்கடை தற்போது றக்கா றோட் (நரிக்குண்டடியில்) இயங்குகின்றது என்பதை அறியத்தருகின்றேன்.

மா.சிவஞானம்
உரிமையாளர்.

### பதவி வெற்றிடங்கள்

எமது கணனி நிறுவனத்திற்கு எழுதுவினைஞர், போதனாசிரியர்(Instructor) போன்ற பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**Softview Computer College**
NO. 55, Arasady Road, [illegible]
[illegible]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## நவரட்ணம் மனோராஜ்



கொட்டடியைப் பிறப்பிடமாகவும் சங்கரப் பிள்ளை வீதி, ஆனைக்கோட்டையை வதிப்பிடமாகவும் கொண்ட நவரட்ணம் மனோராஜ் நேற்று (05.01.2006) வெள்ளிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் நவரட்ணம் - பவளமணி தம்பதியரின் அன்பு மகனும் நடராஜா, காலஞ்சென்ற நாகரெட்ணத்தின் அன்புப் பேரனும் மனோரஞ்சன், ரஜனி, ரஜீவன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் விஜி, பிரேம்ராஜ் ஆகியோரின் மைத்துனரும் ராசரெட்ணம், அன்னலஷ்மி, சுப்பிரமணியம், சந்திரா, விநாயகமூர்த்தி செல்வராணி ஆகியோரின் பெறாமகனும் பொன்னுத்துரை விக்னேஸ்வரி, கணபதி ஜெகசோதி, காலஞ்சென்ற செல்வநாயகம், சாந்தரூபி, செல்வரட்ணம், தவராணி ஆகியோரின் அன்பு மருமனும் மற்றும் சதுஸ்ரன், அபிநயன் ஆகியோரின் சித்தப்பாவும் தட்சாயினி, நிலாக்சாயினி, கம்சாயினி, சாத்விகா ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கோயில் வீதி, கொக்குவில் கிழக்கில் உள்ள அவரது சகோதரியான ராஜ் ரஜனி இல்லத்தில் நாளை(07.01.2007) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று, நண்பகல் 12 மணிக்கு பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
*சங்கரப்பிள்ளை வீதி,ஆனைக்கோட்டை.* நவரட்ணம்(நவம்).

## திருமதி இந்திராணி யோகரட்ணம் (Baby)



ஞானவைரவர் கோயில் வீதி, உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி இந்திராணி யோகரட்ணம் ஜேர்மனியில் 03.01.2007 காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(07.01.2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு (ஜேர்மன் நேரம்) ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"அயோத்தியா"
110, [illegible] வீதி, [illegible]
[illegible]

தகவல்:
இ.இராஜ்குமார்
[ஆசிரியர், யா/கோண்டாவில் இந்துமகா வித்தியாலயம்]

## சிவப்பிரகாசம் குமாரசுவாமி (J.P.)

(ஓய்வுபெற்ற ஆசிரியரும், சமாதான நீதவானும்)



பத்தமேனியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சிவப்பிரகாசம் குமாரசுவாமி 05.01.2007 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவப்பிரகாசம் - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும் கமலாசனி, பகீரதியம்மா (U.K.), சோதிராணி (லிகிதர் M.P.C.S), தங்கேஸ்வரி, கதிரமலைநாதன் (கிராம உத்தியோகத்தர் - வளலாய்), தில்லைநாயகி(தாதி உத்தியோகத்தர், யாழ்போதனா வைத்தியசாலை), கோணேஸ்வரி(ஆசிரியர், பத்தமேனி இரத்தினேஸ்வரி), தேவகுஞ்சரி(U.K.) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற சிவபாதம் (ஓய்வுபெற்ற அதிபர் புத்தொளி), கந்தஞானி (U.K.), சண்முகராசா (நிதி உதவியாளர், பிரதேச செயலகம் கோப்பாய்), திருநாவுக்கரசு, ஸ்ரீவதனி, திலகசுந்தரராசா, மதிவர்ணன், மணிவண்ணன்(U.K.) ஆகியோரின் அன்பு மாமனும் தமயந்தி (U.K.), சந்திரன்(U.K.), மணிமாலா(U.K.), சுதாகரன்(U.K.), கணேசன்(U.K.), கவிதா, முகுந்தன்(வீனஸ் கல்வி நிலையம், அச்சுவேலி), நிஷாந்தன், சுஜனி, நித்தியா, சுவர்ணா, அருட்செல்வன் (கனடா), சிவச்செல்வன், தவச்செல்வன், தமிழ்ச்செல்வன், கலைச்செல்வன், திலக்ஷன், மதிலக்ஷனா, தர்மிகா, சரணியன்(U.K.), யதுர்மியா(U.K.) ஆகியோரின் அன்புப் பேரனும் கிறிஸ்ரிகா(U.K.), கவீன்(U.K.), கார்த்திகேயன்(U.K.), நிவேதா(U.K.) ஆகியோரின் பாசமிகு பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(06.01.2007) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தித்தாங்குளம் இந்து மயானத்தில் பூதவுடல் தகனஞ் செய்யப் படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
(65712) கதிரமலைநாதன் (மகன்) [கிராம உத்தியோகத்தர்].

## பழனித்துரை அன்னலட்சுமி



நல்லூர் சிவன் புதுவீதி, 109/8. ஐ சேர்ந்த பழனித்துரை அன்னலட்சுமி நேற்று(05.01.2007) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பழனித்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தையா, இரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் புஸ்பவரதகுமார் (சுவிஸ்), புஸ்பரத்தினம், புஸ்பமாலா, புஸ்பவதரகுமாரி (லண்டன்), புஸ்பநவக்குமார், புஸ்பவரதகோகிலகுமாரி (இந்தியா), ஜெனபதகல்யாணி (சுவிஸ்), நந்தினி (ஜேர்மன்), இமையாளினி (இந்தியா) ஆகியோரின் பாசமிகு தாயும் விமலா, கிருஷ்ணமூர்த்தி, தங்கராஜா, சியாமளேந்திரன், சற்குணராசா, திருமாறன், தெய்வேந்திரன், சதீஸ்கரன் ஆகியோரின் பாசமிகு மாமியும் மின்ரி, ஜெனி, எரிக், ஜெயகௌரி, தபோதினி, பர்மிலா, நிஷாந்தன், வாருணியா, துர்க்காசுலோஜினி, அனோச், அஜித், றொசானி, ஆதித்தன், கார்த்திகன், தேவதா, கபீலாசன், கஜலினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (06.01.2007) சனிக்கிழமை மு.ப 10 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன் புதுவீதி,
நல்லூர். (65716)
தகவல்:
சி.நிஷாந்தன்(பேரன்)

## திரவியம் சற்குணன் (பேபி)



அல்வாய் மேற்கு, செல்வம் பூங்காவைப் பிறப்பிடமாகவும் வதிரி தருணா இல்லத்தை (வாரியனா வளவு) புகுந்த இடமாகவும் கொண்ட திரவியம் சற்குணன் (பேபி) 04.01.2007 வியாழக் கிழமை அகாலமரணமடைந்துவிட்டார்.

அன்னார் ஓய்வுபெற்ற உபஅதிபர் சி.திரவியம் (யா/ தேவரையாளி இந்துக்கல்லூரி) திருமதி தவமணிதேவி ஆகியோரின் அன்பு மகனும் டாக்டர் சபேசன் (கொழும்பு), மேனகா தனபாலசிங்கம், சர்வேசன்(பொறியியலாளர் - கனடா), சயந்தன் (சுவிஸ்), சம்பந்தன், மேகலா சிவகரன், சௌந்தரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற செல்வராசா-வேலாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகனும் ரமணியின் அன்புக் கணவரும் தருணி, சந்தோஷ் ஆகியோரின் அன்புத் தந்தையும் திருநாவுக்கரசு நாகேஸ்வரி தம்பதியரின் பெறாமகனும் உதயராசன் (லண்டன்), இன்பராசன், சுரேஸ், சுகுணராசன்(GUNA BELL நெல்லியடி), தன பாலசிங்கம் (ஆசிரியர் - திருமலை), சிவகரன் (துறைமுக அதிகாரசபை - பருத்தித்துறை), சுதர்சனா (கனடா), ஜெயதிலகா, பாலச்சந்திரன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் மயூரி, உமா, சோனியா ஆகியோரின் சிறிய தந்தையு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(07.01.2007) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூத வுடல் தகனக்கிரியைகளுக்காக அல்வாய் பங்குவேம்படி பொது மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
(சி-51763) செ.சுகுணராசன்(சகோதரன்).

# மீசாலையில் நாளை மருத்துவ முகாம்

தென்மராட்சி, ஜன.6

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் மீசாலைப் பகுதி மக்களுக்கென இலவச மருத்துவ பரிசோதனை முகாமினை நாளை ஞாயிற்றுக்கிழமை மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் நடத்தவுள்ளனர்.

இதில் கண், இரத்த அழுத்தம், சலரோகம், தொழுநோய், சிக்குன்குனியா ஆகிய நோய்கள் தொடர்பான பரிசோதனைகள் நடத்தவுள்ளனர்.

மீசாலை கிழக்கு, மீசாலை மேற்கு, மண்டுவில், கெருடாவில் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களை பரிசோதனையில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

# ஆறாம் ஆண்டு அனுமதி

யாழ்ப்பாணம், ஜன.6

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் தரம் 6 இல் தமிழ், ஆங்கிலமொழி மூலம் கற்பதற்கான அனுமதிகள் வழங்கப்பட்டு வருகின்றன என்று பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார். (1-203)

# விளையாட்டு விஞ்ஞான அலகு மாணவருக்கு

யாழ்ப்பாணம், ஜன.6

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகின் 6ஆம்,7ஆம் அணிகளின் மாணவர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 9ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு விளையாட்டு விஞ்ஞான அலகு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இரு அணிகளின் மாணவர்களையும் இதில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

# வாகரைப் பாடசாலைகளில் அகதிகள்; கல்வி வாய்ப்பின்றி 1,500 மாணவர்கள்!

மட்டக்களப்பு,ஜன.6

மட்டக்களப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வாகரைப் பகுதியிலுள்ள பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட்டிருப்பதால் 1,500 இற்கும் அதிகமான மாணவர்கள் கல்வி வாய்ப்புகளின்றி பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

வாகரைப் பகுதியில் ஏழு பாடசாலைகளே உள்ளன. அவற்றில் நான்கு பாடசாலைகளில் அகதிகள் தங்கியிருக்கின்றனர்.

ஏனைய மூன்று பாடசாலைகளையும் நோக்கி ஸ்ரீலங்காப் படையினர் தொடர்ச்சியாக மேற்கொண்டு வந்த எறிகணைத் தாக்குதல்களால் அச்சம் காரணமாக அப்பகுதிக்குப் பொதுமக்கள் எவரும் செல்வதில்லை.

இந்த நிலையில் நாட்டிலுள்ள பாடசாலைகள் அனைத்தும் முதலாம் தவணைக்காகத் திறக்கப்பட்டுவிட்ட போதிலும், வாகரைப் பகுதிப் பாடசாலைகள் எவற்றையும் திறக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

இதனால் வாகரை மற்றும் அதனையடுத்துள்ள பகுதிகளிலுள்ள மாணவர்கள் பாடசாலைக் கல்வியைத் தொடர முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இவர்களது எதிர்காலம் தொடர்பாகப் பெற்றோர் உரிய அதிகாரிகளுக்கு முறையிட்டுள்ள போதிலும் எவ்விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்றும் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

வாகரைப் பகுதிக்கான ஏ-15 வீதி மீண்டும் திறக்கப்பட்டு போக்குவரத்துக்கள் நடைபெறும் பட்சத்தில் மட்டும்தான் இப்பகுதியிலுள்ள பாடசாலைகளை இயங்கவைக்க முடியும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (த)

# நீதிமன்றில் இரகசிய அறிக்கை சமர்ப்பிப்பு

பயங்கரவாதிகளுக்கு நிதி சேர்த்த விவகாரம் என்ற தலைப்பிலான இரகசிய அறிக்கை ஒன்றை குற்றப் புலனாய்வுப் பொலிஸார் நேற்றுமுன்தினம் கொழும்பு மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தனர்.

பெரும்பாலும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் வங்கிக் கணக்குகளை முடக்கியமை தொடர்பான மத்திய வங்கியின் விசாரணைகளின் அடிப்படையில் அமைந்த அறிக்கையாக அது இருக்கக்கூடும் எனக் கருதப்பட்டது. (உ)

# பெற்றோலின் விலை 5 ரூபாவால் அதிகரிப்பு

கொழும்பு, ஜன.6

வியாழக்கிழமை நள்ளிரவு முதல் பெற்றோலின் விலை லீற்றர் ஒன்றுக்கு 5 ரூபாவால் உயர்வடைந்துள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

இதன்படி ஒரு லீற்றர் 92 ரூபா விற்கப்பட்ட பெற்றோல் 97 ரூபாவாகவும், ஒரு லீற்றர் 95 ரூபாவாக விற்கப்பட்ட முதல்தர பெற்றோல் 100 ரூபாவாகவும் விற்கப்படுகின்றது.

ஆயினும், டீசல், மண்எண்ணெய் என்பவற்றின் விலைகளில் எதுவித மாற்றமும் இல்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (த-12)

# ரவிராஜ் கொலை குறித்து விசாரிக்க 'ஸ்கொட்லண்ட் யார்ட்' பொலிஸார் வருகை

கொழும்பு,ஜன.6

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் நடராஜா ரவிராஜின் கொலை தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கென 'ஸ்கொட்லண்ட் யார்ட்' பொலிஸார் நேற்றுமுன்தினம் கொழும்பை வந்தடைந்தனர்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 2 மணியளவில் 5 பேர் அடங்கிய குழுவினர் கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இவர்கள் 2 வாரங்கள் கொழும்பில் தங்கியிருந்து மாமனிதர் ரவிராஜின் கொலை தொடர்பான விசாரணைகளில் ஈடுபடுவர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதற்கு முன்னர் கடந்த 1990 ஆம் ஆண்டு முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி படுகொலை செய்யப்பட்ட போது அவரது கொலை தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கு 'ஸ்கொட்லண்ய யார்ட்' பொலிஸார் இலங்கை வந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (த-12)

# யாழ். முஸ்லிம்களின் மீளக்குடியேறும் உரிமையை உறுதிப்படுத்துங்கள்

## சமாதானப் பேரவை அழைப்பு

கொழும்பு, ஜன.6

''வடக்கிலிருந்து பலாத்காரமான முறையில் முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு இந்தப் புத்தாண்டோடு 17 வருடங்களாகின்றன. ஆனாலும் இவ்வாறு இடம்பெயர்ந்த அந்த முஸ்லிம்களில் பலர் இன்னமும் தமது சொந்த வீடுகளுக்குச் செல்லமுடியாதவர்களாகவே இருக்கின்றனர். இவர்கள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்குச் சென்று குடியேறுவதற்கான சகல வழிவகைகளையும், அரசும் புலிகளும் செய்ய முன்வரவேண்டும்'' என்று இலங்கை தேசிய சமாதானப் பேரவை அறிக்கையொன்றின் மூலம் கோரிக்கை விடுத்திருக்கிறது.

அந்த அறிக்கையில் மேலும் சொல்லப்பட்டிருப்பதாவது:-

2002இல் செய்யப்பட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கையின் பயனாக கணிசமானளவு முஸ்லிம்கள் வடக்கே சென்று மீளக் குடியேறினார்கள். ஆனாலும், முற்றுமுழுதாக இடம்பெயர்ந்த அனைவரும் சென்று குடியேற முடியவில்லை.

இந்த முஸ்லிம்களின் பிரச்சினைகளுக்கு போதிய கவனம் செலுத்தப்படவில்லை என்ற ஒரு குறை உண்டு. இதுவே எதிர்வரும் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது, முஸ்லிம்கள் சார்பில் தனியானதொரு தூதுக்குழு இடம்பெறவேண்டும் என்ற கோரிக்கைக்கு வலுவூட்டுவதாயிருக்கிறது. எனவே, எதிர்காலத்தில் நடைபெறவிருக்கும் பேச்சுகளின்போது, இவர்களின் மீள்குடியேற்றத்துக்கான உரிமைகள் குறித்து பேச அரசும் புலிகளும் முன்வரவேண்டும் என்று இலங்கை தேசிய சமாதானப் பேரவை இரு தரப்பினரையும் கேட்டுக்கொள்கிறது - என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(க)

# தனியார் வர்த்தகர்கள் மா விற்பனை செய்ய அனுமதி

யாழ்ப்பாணம்,ஜன.6

குடாநாட்டில் உள்ள தனியார் வர்த்தகர்கள் ப.நோ.கூ. சங்கங்களிடம் இருந்து கோதுமை மாவைப் பெற்று விற்பனை செய்ய யாழ். அரச அதிபர் கே.கணேஷ் அனுமதி வழங்கியுள்ளார்.

அடுத்த வாரம் முதல் இந்த விற்பனையை ஆரம்பிக்கலாம் என்று அரச அதிபர் தெரிவித்தார்.

ப.நோ.கூ.சங்கங்களில் அரிசி, சீனி, பருப்பு போன்றவற்றை கொள்வனவு செய்து அவற்றை நிர்ணயிக்கப்பட்ட விலைகளில் விற்பனை செய்ய தனியார் வர்த்தகர்களுக்கு ஏற்கனவே அரச அதிபர் அனுமதி வழங்யிருந்தார் என் பது தெரிந்ததே. (1-203)

# வடமராட்சியில் ஒரு கிலோ குத்தரிசி பங்கீட்டு அட்டைக்கு விநியோகம்

வடமராட்சி,ஜன.6

வடமராட்சிப் பகுதியில் உள்ள சில பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் முதல் தடவையாக ஒரு கிலோ குத்தரிசி பங்கீட்டு அட்டைக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

குத்தரிசிச் சோற்றை சாப்பிட்டுப் பழகிய மக்களுக்கு அசாதாரண சூழ்நிலை ஏற்பட்ட காலம் தொடக்கம் கோறா வர்க்க சம்பா, வெள்ளை அரிசியே வழங்கப்பட்டு வருகிறது.

தற்போது பங்கீட்டுக்கு 5 கிலோ அரிசி, ஒரு கிலோ பருப்பு கூட்டுறவுச் சங்கங்களால் அனைவருக்கும் பங்கீட்டுக்கு வழங்கப்படுகின்றன. இதில் ஒரு கிலோ குத்தரிசியும், 4 கிலோ கோறா அரிசியும் வழங்கப்படுகிறது. (1-173)

# 705 மெற்றிக்தொன் விளைபொருள் 'லிவர் பூல்' கப்பலில் திருமலைக்கு

குடாநாட்டிலிருந்து 705 மெற்றிக் தொன் உள்ளூர் உற்பத்திப் பொருள்கள் 'லிவர் பூல்' கப்பல் மூலம் நேற்றுமுன்தினம் திருகோணமலைக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

குடாநாட்டின் விளைபொருள்களுக்கு சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவும் உள்ளூர் உற்பத்தியாளர்களின் தொழில் வாய்ப்பை மேம்படுத்தவுமே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என யாழ். அரச அதிபர் கே.கணேஸ் தெரிவித்தார்.

புகையிலை, சுருட்டு, வெங்காயம் ஆகிய உற்பத்திப் பொருள்களே 'லிவர்பூலில்' அனுப்பிவைக்கப்பட்டன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (1-202)



வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளின் உபயோகத்திற்கென மக்கள் வங்கி ஜெனரேட்டர் ஒன்றை அன்பளிப்புச் செய்துள்ளது.

வங்கியின் உத விப் பொதுமுகாமையாளர் ரி.கே.ஆனந்தராஜா கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.கைலாசநாதனிடம் சம்பிரதாயபூர்வமாக ஜெனரேட்டரைக் கையளிப்பதைப் படத்தில் காணலாம். படத்தில் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் பி.விக்னேஸ்வரன், சுன்னாகம் கிளை முகாமையாளர் எஸ்.சந்திரகாந்தன் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

# மன்னாரில் நடத்தப்பட்ட விமானத் தாக்குதலை கண்டிக்கிறது பல்கலை. மாணவர் ஒன்றியம்

யாழ்ப்பாணம்,ஜன்.6

மன்னார் படகுத்துறையில் இடம்பெற்ற விமானத் தாக்குதலில் பொதுமக்கள் கொல்லப்பட்டதைக் கண்டித்து யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தற்போதைய அரசு தனது ஆட்சிக் காலத்தில் அதிகமான நாள்களைத் தமிழ் மக்களைக் கொல்லவும் கடத்தவுமே செலவிட்டுள்ளது. அப்பாவி மக்களின் நிலைகளைத் தாக்கிவிட்டு புலிகளின் நிலைகளைத் தாக்கி அவர்களைக் கொன்றதாகக் கதைவிடும் அரசின் கருத்துக்களை உலகம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவே கூடாது.

புலிகள் மக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தி குடியிருப்புக்களை அண்டி இராணுவ நிலைகளை அமைக்கின்றார்கள் எனத் தெரிவித்துக் குற்றம் சாட்டும் அரசு இந்த விடயத்தைத் தானும் கவனத்தில் எடுக்கவேண்டும். இராணுவத்தின் நிலைகள் வைத்தியசாலைகள், பாடசாலைகள் என்பனவற்றிலும் அவற்றுக்கு அருகிலும் அமைக்கப்பட்டிருப்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

புலிகளைக் கொல்கின்றோம் என பொதுமக்களையும் குழந்தைகளையும் மாணவர்களையும் கொல்லும் தாக்குதலுக்கு உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கும் அமைப்புகளும் பிரதிநிதிகளும் மௌனம் காப்பதும் வெறும் கண்துடைப்பு அறிக்கைகளை விடுவதும் கவலையளிப்பதாகவே உள்ளது என்றுள்ளது. (1-202)

# வடமராட்சிக் கல்வி வலயத்தில் 151 மாணவர் புலமைப்பரிசில் சித்தி

வடமராட்சி,ஜன.6

வடமராட்சி கல்வி வலயத்தில் 151 மாணவர்கள் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

பருத்தித்துறைக் கல்விக் கோட்டத்தில் 76 மாணவர்களும், கரவெட்டிக் கல்விக் கோட்டத்தில் 71 மாணவர்களும், மருதங்கேணி கல்விக் கோட்டத்தில் 4 மாணவர்களும் சித்தியடைந்துள்ளனர்.

கரவெட்டிக் கல்விக் கோட்டத்திலுள்ள தேவரையாளி இந்துக் கல்லூரி மாணவன் க.மதனகரன் 179 புள்ளிகள் பெற்று முதலாம் இடத்தில் உள்ளார். பருத்தித்துறைக் கல்விக் கோட்டத்திலுள்ள வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி மாணவி வே.கோபிகா 167 புள்ளிகள் பெற்று இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

பருத்தித்துறைக் கல்விக் கோட்டத்தில் சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை பாடசாலை ரீதியாக வருமாறு:-

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி 15 பேர், மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலை 14 பேர், தும்பளை சிவப்பிர காச மகா வித்தியாலயம் 9பேர், புற்றளை மகா வித்தியாலயம் 6 பேர், தம்பசெட்டி மெ.மி. த.க. பாடசாலை 6 பேர், துன்னாலை மேற்கு மெ.மி.த.க. பாடசாலை 6பேர், பரு. சித்தி விநாயகர் வித்தியாலயம் 5 பேர், வல்லை அ.மி.த.க. பாடசாலை 3 பேர், வல்வை றோ.க.த.க. பாடசாலை 2 பேர், கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலை 2 பேர், புலோலி மெ.மி.த.க. பாடசாலை 2 பேர், வல்வை மகளிர் மகாவித்தியாலயம் ஒருவர், வல்வை சிவகுரு வித்தியாலயம் ஒருவர், சென். தோமஸ் றோ.க. பெண்கள் பாடசாலை ஒருவர், கெருடாவில் இ.த.க. பாடசாலை ஒரு வர், திக்கம் சித்திவிநாயகர் வித்தியாலயம் ஒருவர், தட்டாதெரு மெ.மி. த.க. பாடசாலை ஒருவர்.

கரவெட்டிக் கல்விக் கோட்டத்தில் சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை பாடசாலை ரீதியாக வருமாறு:-

நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை 22 பேர், கரவெட்டி மாணிக்காவாசகர் வித்தியாலயம் 15 பேர், துன்னாலை காசிநாதர் வித்தியாலயம் 8 பேர், உடுப்பிட்டி பெண்கள் கல்லூரி 5 பேர், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி 5 பேர்,கரணவாய் வேதாரணீஸ்வரா வித்தியாலகம் 4 பேர், தேவரயாளி இந்துக் கல்லூரி 2பேர், அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம் 2 பேர், கரணவாய் மணியகாரன் தோட்டம் வித்தியாலயம் 2 பேர், வதிரி திரு இருதயக் கல்லூரி ஒருவர், வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம் ஒருவர்.

மருதங்கேணி கல்விக் கோட்டத்தில் சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை பாடசாலை ரீதியாக வருமாறு:-

குடத்தனை கரையூர் அ.மி.த.க. பாடசாலை 2 பேர், வெற்றிலைக்கேணி பரமேஸ்வராக் கல்லூரி ஒருவர், கட்டைக்காடு றோ.க. த. க.பாடசாலை ஒருவர். (1-173)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## VACANCIES

UNIVERSITY OF JAFFNA, SRI LANKA.

Further to our advertisement dated 06.11.2006 calling applications for the Vacant posts in the Faculty of Medicine, the closing date of entertaining applications is extended upto 19th January 2007.

University Of Jaffna, Jaffna. 04.01.2007 Registrar.

## ஆண்டு பல சென்றாலும் உம் நினைவுகளுடன் 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 22 * 08 * 1937



இறப்பு 01 * 01 * 1994

அமரர் **சங்கரப்பிள்ளை நமசிவாயம்**

(முன்னாள் தலைவர், சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்.)

அமரரின் நினைவுநாள் இன்று அவரின் நினைவு மண்டபத்தில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளதால் அனைத்து அங்கத்தவர்களும் சமுகம் தரவும்.

தனங்கிளப்பு வீதி,
சாவகச்சேரி. (சி/51773)

**சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவில்லும்

மலர்வு 13 * 02 * 1931



உதிர்வு 07 * 12 * 2006

திருமதி **இராசையா சின்னப்பிள்ளை**

திதி: கார்த்திகை அபரபக்க திருதியை

07.12.2006 அன்று சிவபதமடைந்த எமது அன்னையின் மரணச் செய்தி அறிந்து எம் துயரில் பங்குபற்றியோருக்கும், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும், கண்ணீர் அஞ்சலிகளை பிரசுரித்த அன்புள்ளங்களுக்கும், தந்தி, தொலைபேசி மூலம் துயர் பகிர்ந்த அனைவருக்கும் ஏனைய பல வழிகளிலும் உதவிகள் புரிந் தோருக்கும் நன்றிகள் பல கோடி உரித்தாகட்டும்.

இன்று (06.01.2007) சனிக்கிழமை நடைபெறும் ஆத்மசாந்தி நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

பங்களா வீதி,
மீசாலை மேற்கு,
மீசாலை. (65576)

**குடும்பத்தினர்.**

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

அமரர்

**சிவசாமி ரஞ்சன்**

[பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர், யாழ்ப்பாணம்]

தோற்றம் 10.05.1959 — மறைவு 07.12.2006



எம்மை ஆறாத்துயரில் நலிக்கவிட்டு மீளாத்துயில் கொண்ட எமது குடும்பத் தலைவரின் பிரிவின் போது எமக்கு ஆறுதலும், தேறுதலும் தந்த அனைவருக்கும் இத்தால் எமது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (06.01.2007) சனிக்கிழமை நடைபெறும் 31ஆம் நாள் நினைவஞ்சலியிலும், அந்தியேட்டிக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

11/5, செம்மணி வீதி,
முத்திரைச் சந்தை, யாழ்ப்பாணம்.
தொ.பே : 077 9004183. (65515)

தகவல்:
**சித்திரா ரஞ்சன்**
(மனைவி).

## மரண அறிவித்தல்

*கிளடிஸ் மங்களம் துரைராஜா*



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் இராசாவின் தோட்டத்தில் வசித்தவருமான கிளடிஸ் மங்களம் துரைராஜா 02.01.2007 செவ்வாய்க்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா துரைராஜாவின் அன்பு மனைவியும் நேசக்குமார் (**Alliance Development Trust**), சாந்தி, சறோ (**France**) றெஜினா (**Joe** -ஆட்பதிவுத் திணைக்களம்) தேவ பாலன் (கனடா), காலஞ்சென்ற ஜெபசீலன் (கனடா), செல்வதி (செல்லா- **Expo Air**) ஆகியோரின் அன்புத் தாயுமாவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை இன்று (06.01.2007) சனிக்கிழமை மு.ப 9.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.12, இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 9124*

தகவல்:
நேசக்குமார்
(மகன்).

## வீடு வாடகைக்கு

**3 அறைகள் கொண்ட சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.**

தொடர்பு:-
95, மணல்தறை லேன்,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
(திருநெல்வேலி சிவன் கோயில் பின் வீதி)
தொ.பே.: 021 222 6460

(65631)

## Organ/ Violin Notes

Organ, வயலின், Guitar, வீணை, புல்லாங்குழல் போன்ற இசைக் கருவிகளுக்கான 250 சினிமாப் பாடல் களின் இசைக்குறிப்புகள், கேள்வி ஞானம், Organ Exercise, Theory ஆகியன விற்பனைக்குண்டு. புதிய வகுப் புகள் பிரதி சனிக்கிழமை தோறும் ஆரம்பமாகும்.

**சுரவீணா இசை மன்றம்**
131, கோயில் வீதி, நல்லூர்.
தொ.பே: 0713055991, 0777031293
(நல்லூர் ஆலயத்திலிருந்து 500 மீற்றர் தெற்கே)

## வைத்திய சேவை

வாதரோகங்களா?, சருமரோகங்களா?, ஆஸ்த்துமாவா?, நீரிழிவா?, மலேரியாவா?, குழந்தைகளின்ரோகங்களா?, உடல்மெலிவா?, உடல் பருமனா?, தலைமுடி உதிர்தலா?, தலைமுடி நரைத்தலா? எதுவாயினும் சிறந்த சிகிச்சை அளிக்கப்படும்.

டாக்டர் த.சிவானந்தன்
'HOPE CLINIC'
5, வைமன் வீதி, நல்லூர்.

## திருமண சேவை

டாக்டர்கள், பொறியியலாளர்கள், பட்டதாரிகள், ஆசிரியர்கள், எழுதுவினைஞர்கள், வர்த்தகர்கள் பலரது ஜாதகங்கள் எம்மிடம் உள்ளன. உங்கள் பிள்ளைகளின் வளமான திருமண வாழ்வுக்கு வழிகாணவும், உள்நாட்டு, வெளி நாட்டு மணமக்களைத் தெரிவு செய்யவும் நாடுங்கள்

**த.சிவானந்தன்** பிரபல சோதிடர்
**5,வைமன் வீதி, நல்லூர்.**
**தொ.பே: 021 222 8102**

## தவறிவிட்டது

எட்னா மரியதாஸ் என்பவரின் தேசிய அடையாள அட்டையும் (836342658V) விசேட அடையாள அட்டையும் (0901000127V) வேறு சில முக்கிய ஆவணங்களுடன் நல்லூரில் இருந்து யாழ்ப்பாண நகரம் நோக்கிப் பயணம் செய்கையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் உரிய முகவரிக்கோ அல்லது 'பூரோவில் நிறுவனம்', 866, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். எனும் முகவரிக்கோ அனுப்பி வைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொ.பே: 021 222 2849

## தவறிவிட்டது

எனது செல்போன் NOKIA கப்பூதுக்கும் யாக்கரைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 226 3287 அல்லது ராஜன் நகைமாடம், நெல்லியடியில் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

ச.நடராசா

## D.C.M

பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

வெளிவாரிப் பட்டப்படிப்புகள்

1st Com
G.A.Q

B.Com - Part I
- Part II
- Part III

B.A - Part I
- Part II

ஆரம்பம் :
**06.01.2007 (சனி) மு.ப. 9**

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சார்ந்த பிரஜா உரிமை உடையவரான சகல வசதிகளோடும் கனடாவில் வதியும் மணமகனுக்கு கல்வித்தரமும் அழகும் உயரமுமுடைய மணமகள் வேண்டும். சீதனமல்ல. அழகே முக்கியமாகக் கணிக்கப்படும். வயது 25, உயரம் 5' 10" நட்சத்திரம் ஆயில்யம், கிரகபாவம் 12 மட்டும்.

**எஸ்.ஏ.தர்மலிங்கம்**
**24, புறாடி லேன், கச்சேரி கிழக்கு, யாழ்ப்பாணம்.**

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கோப்பாய், சீனிவாசகம் வீதியில் ஒரு பரப்பில் வீடும் காணியும், அரியாலையில் 21 பரப்பு வயல் காணியும் விற்பனைக்குண்டு.

**தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இல. 5035, 9085**

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையில் 10 வருட காலமாக கணித பாட ஆசிரியையாகக் கடமையாற்றியவரும், கடைசியாகக் கொழும்பு பாத்திமா கல்லூரியில் ஆசிரியையாகக் கடமையாற்றி வந்தவருமான

**செல்வி நடராஜா கலைவாணி**

அவர்கள் கடந்த 01.01.2007 அன்று காலமானதையிட்டுக் கவலையடைவதோடு அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் குழாம்,**
யா/ அரசினர் ... வித்தியாலயம்,
நீர்வேலி.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/நீர்வேலி றோ.க.த.க.பாடசாலை
மாணவன்
**ஜெ.ஜெயதீபன்**

2006ஆம் ஆண்டு ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 143 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையையிட்டு மனதார வாழ்த்துவதோடு, இவர் பரீட்சையில் சித்தி எய்தக் காரணமாய் இருந்த பாடசாலை அதிபர், கற்பித்த ஆசிரியர் மற்றும் தனியார் கல்வி நிலைய ஆசிரியர் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அப்பா, அம்மா, அப்பப்பா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, மாமா, மாமி, அத்தான் (கருணாகரன்), அக்கா (ஜெனிந்தா), சித்திமார், மாமிமார், அண்ணாமார்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி. (65340)

## றெறாசோ மாபிள் பதித்தல்

**மேலைத்தேய நவீன தொழில் நுணுக்கங்களுடன் வடகிழ் மாகாண ஆரம்ப கால தொழில் விற்பன்னர்**

*தேவையான மூலப் பொருள்களுடன் வேலை செய்து கொடுக்கப்படும்.*

சுவர், தரைக்கும் மாபிள் ரைல்ஸ் பதிப்பவர்கள்.

**'மாபிள்ஸ்'** கண்டாமை, தொல்புரம்
தொ.பே : 222 5286, 222 6729

## English/ Sinhala (Basic to Advanced) Classes

அடிப்படையில் இருந்தே இரு மொழிகளும் கற்பிக்கப்படும். ஒவ்வொருவருக்கும் தனிக்கவனம் செலுத்தப்படும்.
வழமையான வகுப்பு நேரங்கள்: காலை 8.30-11, பி.ப 3 - 4.30
சனி, ஞாயிறு நாள்களில் பிற்பகல் வகுப்புகள் விசேட ஒழுங்குகள் மூலம் மாத்திரம் நடைபெறும்.

T.Sagathevan, B.A. London English/Sinhala tutor- translator (pvt)
46, பிரப்பங்குளம் லேன், வண்ணார்பண்ணை.
தொ.பே: 222 3520

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர் **சிவசம்பு தனேஸ்வரன்**

(ஓய்வுபெற்ற ஊழியர், புகையிரதத் திணைக்களம் )

மலர்வு : 22.11.1937 உதிர்வு : 07.12.2006

07.12.2006 வியாழக்கிழமை அன்று இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவர் சிவசம்பு தனேஸ்வரன் அவர்களது வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (06.01.2007) சனிக்கிழமை மு.ப. 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளன. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

*கடவைப்புலம் வீதி,
சுன்னாகம்.* (62246)

**குடும்பத்தினர்.**

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



07.12.2006 அன்று அமரத்துவமடைந்த

**செல்லத்துரை கனகசுந்தரம்**

*அவர்களின் சபிண்டீகரணக் கிரியைகள் இன்று (06.01.2007) சனிக்கிழமை மு.ப. 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.*

அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

*இல.60, மணல்தறை வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.*

**செ.செல்வநாயகம்**
*(சகோதரன்).*

## பொருளியற் கல்லூரி

நாவலர் றோட், யாழ்ப்பாணம். — கே.கே.எஸ். வீதி, இணுவில். (இரு இடத்திலும்)

**A/L 2009**

**கலை, வர்த்தகப் பிரிவுகள்**

**இன்று ஆரம்பம்**

**06.01.2007 சனி**

நீங்கள் நன்கறிந்த யாழ். நகரின் பிரபல்யம் பெற்ற ஆசிரியர் குழுவினால்.

| A/L 2009 | யாழ்.நகர். | இணுவில். |
|---|---|---|
| பொருளியல் | S.வரதராஜன் | M.C.சுதாகரன் |
| | M.C.சுதாகரன் | |
| கணக்கீடு | B.முகுந்தன் | B.முகுந்தன் |
| வணிகக்கல்வி | V.முரளி | V.முரளி |
| தமிழ் | A.மீரா | N.பாலா |
| இந்து நாகரிகம் | P.ஜோதீஸ்வரன் | S.சுரேஸ் |
| அளவையியல் | R.P.ராமா | ஜொ.சுரேஸ் |
| புவியியல் | P.S.குமரன் | P.S.குமரன் |
| கிறிஸ்தவம் | வசந்தன் | வசந்தன் |
| இந்து சமயம் | N.T.தரன் | N.T.தரன் |
| வரலாறு | சுதன் | சுதன் |
| அரசியல் | றஜீவன் | சுகாஷ் |
| நாடக அரங்கியலும் | கணேஸ் | கணேஸ் |
| ஆங்கிலம் | நிஷாந்தன். | நிஷாந்தன். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறு மாதங்களுக்குத் தேவையான மருந்து வகைகளை எடுத்துவர நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.6

குடாநாட்டுக்கு அடுத்த 6 மாதங்களுக்குத் தேவையான மருந்து வகைகளை உடன் எடுத்துவருவதற்கான நடவடிக்கைகளை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டுள்ளார் என அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அரச மருந்துக் கூட்டுத்தாபனத்தில் (ஒசுசல) இருந்து அடுத்த 6 மாத காலத்திற்குத் தேவையான மருந்து வகைகளை எடுத்துவர அமைச்சர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

தேவையான மருந்து வகைகளின் பட்டியலை உடன் தயாரிக்குமாறும் யாழ். அரச அதிபருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

இவ்வாறு எடுத்துவரப்படும் மருந்து வகை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் மருந்தகங்கள் மூலம் விநியோகிக்கப்படவுள்ளன - என்றுள்ளது.

(1-202)

# பல்கலை. வளாகத்தில் நியாய விலை கடையொன்றை திறக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.6

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஊழியர்கள் தமக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களை வசதியாகப் பெற்றுக்கொள்ளும் வகையில் நியாய விலைக் கடையொன்றை பல்கலைக்கழக வளாகத்தில் திறக்கக் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

அனைத்துப் பல்கலைக்கழகங்களின் ஊழியர் சங்க சம்மேளனம் இந்தக் கோரிக்கையை அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரிடம் சமர்ப்பித்துள்ளது.

யாழ்.குடாநாட்டில் பொருள்களின் விலைகள் அதிகரித்துக் காணப்படுகின்றது. இந்நிலையில் பங்கீட்டு அடிப்படையில் பொருள்களைப் பெற நீண்ட வரிசையில் காத்து நிற்கும் நிலைமையும் ஏற்பட்டுள்ளது. பல்கலைக்கழக ஊழியர்கள் தமது கடமைக்குச் சமுகமளிக்க வேண்டிய நேரத்தில் பொருள்கள் வாங்க வரிசைகளில் நின்று காலம் கழிக்கநேர்கிறது. எனவே நியாய விலை கடையை ஆரம்பித்து பல்கலைக்கழக ஊழியர்களுக்கு பொருள்கள் பெற ஆவன செய்யும்படி அக்கோரிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகங்களின் ஊழியர் சங்க சம்மேளனத் தலைவர் மல்வத்கம இக்கோரிக்கையை அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரிடம் விடுத்துள்ளார்.

இக்கோரிக்கையின் பிரதிகள் உயர் கல்வி அமைச்சர், யாழ். அரசாங்க அதிபர், பல்கலைக்கழக துணைவேந்தர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன. (ப-68)

# மூன்று மாத காலமாக வந்து சேராத உணவுப் பொதிகள்; மக்கள் விசனம்

நல்லூர்,ஜன.6

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னதாக தென்பகுதியில் இருந்து உறவினர்களால் தமக்கு அனுப்பிவைக்கப்பட்ட பார்சல்கள் இதுவரை வந்துசேரவில்லை என பொதுமக்கள் பலர் விசனம் தெரிவிக்கின்றனர்.

ஏ9 பாதை மூடப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட அத்தியாவசிய பொருள்கள் தட்டுப்பாடு காரணமாக தென்பகுதியில் உள்ளவர்கள் தமது உறவினர்களுக்கு தபால் பொதிகளூடாக அத்தியாவசியப் பொருள்களை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைப்பது தெரிந்ததே.

இதேசமயம், பிந்தி அனுப்பி வைக்கப்பட்ட பொதிகள் கிடைப்பதாகவும், ஆரம்ப நாள்களில் அனுப்பிவைக்கப்பட்டதாக தென்பகுதியில் உள்ள உறவினர்களால் தெரியப்படுத்தப்பட்டவை இதுவரை தமக்கு வந்து சேரவில்லை எனவும் - பலர் தெரிவித்தனர்.

# கஷ்டப் பிரதேச ஆசிரியர்கள் அதிபர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்க ஏற்பாடு

அச்சுவேலி,ஜன.6

கஷ்டப்பிரதேச, அதிகஷ்டப் பிரதேச பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கும் அதிபர்களுக்கும் ஊக்குவிப்பு கொடுப்பனவுகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளை கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ளது.

கஷ்டப் பிரதேச பாடசாலைகளில் கடமை புரிபவர்களுக்கு ஆயிரத்து 500 ரூபா வீதமும் அதிகஷ்டப் பிரதேசங்களில் கடமை புரிபவர்களுக்கு 2ஆயிரத்து 500 ரூபாவும் மாதாந்தச் சம்பளத்துக்கு மேலதிகமாக ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

தேசிய சம்பள மற்றும் ஊழியர் எண்ணிக்கை சபையின் சிபார்சுக்கு அமைய கல்வி அமைச்சு ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யவுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் ஆகக்கூடிய அளவு 38 வீதமான பாடசாலைகளை அதிகஷ்டப் பிரதேச பாடசாலைகளாகவும் 4 வீதமான பாடசாலைகள் கஷ்டப்பிரதேச பாடசாலைகளாகவும வகைப்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(1-11)

## திருட்டுத் தொடர்பாக ஒருவர் கைது

தென்மராட்சி,ஜன.5

கொடிக்காமம் கச்சாய் வீதி வீடொன்றில் கடந்த வாரம் இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர் நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது எதிர்வரும் 11ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# மண் அகழ்வு வடமராட்சிப் பகுதியில் தீவிரம் கடல் வெள்ளம் குடியிருப்புகளில் புகும் அபாயம்

கரவெட்டி,ஜன.6

வடமராட்சிப் பிரதேசத்தில் அண்மைக் காலமாக சட்ட விரோத மணல் அகழ்வு அதிகரித்துள்ளது. இதனால் கரையோர குடியிருப்புகளுக்குள் கடல் வெள்ளம் புகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

வடமராட்சி கற்கோவளம் புனிதநகர்ப் பிரதேச கடற்கரையை அண்டிய பகுதிகளில் மணல் அகழ்வு செய்வதற்கு யாழ்.அரச அதிபர் கே.கணேஷின் சிபார்சின் பெயரில் தடை செய்யப்பட்டுள்ளது.

தற்போது சட்டவிரோதமாக மண் அகழ்வோர் கற்கோவளம் புனித நகர் போன்ற மக்கள் குடியிருப்புகளை அண்டிய பகுதிகளில் வாகனங்கள் மூலம் மணல் அள்ளி வருகின்றனர்.

மணல் அகழ்வோர் பாதுகாப்புப் படையினருக்குப் பயந்து கிராமங்களுக்குள் அதிவேகமாக வாகனங்களை ஓட்டிச் செல்வதால் விபத்துக்களும் அதிகம் ஏற்படுகின்றன.

இது தொடர்பாக அப்பகுதி மக்கள் வடமராட்சி பருத்தித்துறை பிரதேச செயலர், பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் யாழ்.அரச அதிபர் போன்றவர்களுக்கு மகஜர்களை அனுப்பிவைத்துள்ளனர். (70)

## சிக்குன்குனியா விழிப்புணர்வு கருத்தரங்குகள் வடமராட்சியில்

வடமராட்சி,ஜன.6

சிக்குன்குனியா தொடர்பான விழிப்புணர்வுக் கலந்துரையாடல்கள் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினால் நடத்தப்பட்டுவருகின்றன.

அரச, உள்ளூராட்சித் திணைக்களங்கள் மற்றும் சனசமூக நிலையங்கள் தோறும் இக்கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

## மிருசுவில் கொலை; தேடப்பட்டவர் சரண்

தென்மராட்சி,ஜன.6

மிருசுவில் வடக்கில் கடந்த மாதம் இடம்பெற்ற கொலை தொடர்பாகத் தேடப்பட்டு வந்த நபர் கடந்த வியாழக்கிழமை நீதிமன்றில் சரணடைந்துள்ளார்.

சூரியகுமார் துஷ்யந்தன் என்பவர் தனது தாயாருடன் நீதிமன்றுக்கு வந்து சரணடைந்துள்ளார்.

இந்நபரை எதிர்வரும் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இக்கொலை தொடர்பாக இந்நபரின் சகோதரன் சூரியகுமார் அஜித்தன் உட்பட மூவர் ஏற்கனவே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே.

# பிரெஞ்சு வைத்தியக் குழுவினர் அவசர சிகிச்சையையும் ஆரம்பிக்கின்றனர்

வடமராட்சி,ஜன.6

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் பணியாற்றிவரும் பிரெஞ்சு வைத்தியக் குழுவினர் அவசர சிகிச்சைப் பிரிவிலும் தமது பணிகளை ஆரம்பித்துள்ளனர்.

இக்குழுவினர் சத்திரசிகிச்சை கிளினிக்குகளை நடத்தி சத்திரசிகிச்சைகளையே இதுவரை காலமும் மேற்கொண்டு வந்தனர். இச்சேவையுடன் அடுத்தவாரம் முதல் அவசர சிகிச்சைப் பிரிவிலும் இக்குழுவின் சேவை இடம்பெறும். இதற்கென மேலும் ஒரு வைத்திய நிபுணர் ஒருவர் பிரான்ஸிலிந்து இங்கு வருகை தரவுள்ளார்.

இதேவேளை -

இவ்வைத்தியசாலையில் வைத்திய சேவையை ஆரம்பித்துள்ள பிரெஞ்சு வைத்தியக்குழுவினர் சிகிச்சைக்குத் தேவையான ஒரு தொகுதி மருந்து வகைகளையும் தம்முடன் விமானம் மூலம் எடுத்துவந்துள்ளனர்.

## நீர் இறைக்கும் இயந்திரம் மூலம் வடமராட்சி வயல்களுக்குத் தண்ணீர்

வடமராட்சி,ஜன.6

போதிய மழை இன்மையால் வடமராட்சிப் பிரதேசத்தில் நெற் பயிருக்கு நீர் இறைக்கும் இயந்திரம் மூலம் நீர் இறைக்கப்பட்டு வருகின்றன.

அம்பன், துன்னாலை, கரவெட்டி, கெருடாவில் போன்ற இடங்களில் உள்ள நெல் வயல்களுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்கள் மூலம் விவசாயிகள் நீர் பாய்ச்சி வருகின்றனர்.

(155-173)

## முகாமைத்துவ உதவியாளர்களுக்கு விசேட பயிற்சி வகுப்பு

தென்மராட்சி,ஜன.6

யாழ்.மாவட்ட அரச அலுவலகங்களில் பணியாற்றும் முகாமைத்துவ உதவியாளர்கள், நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்களுக்கு இவ்வருடம் யாழ். பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தினால் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவுள்ளன.

அலுவலகங்களில் பணியாற்றும் வகுப்பு I,II,III அதிசிறப்பு ஆகிய தர முகாமைத்துவ உதவியாளர்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்கள் ஆகியோரின் விவரங்களை எதிர்வரும் பத்தாம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு பிராந்திய ஆணையாளர் சகல திணைக்கள அலுவலகங்களுக்கும் அறிவித்துள்ளார்.

# சமுர்த்தி உதவி பெறும் மீனவர்களின் குடும்பங்களுக்கு மாற்று தொழில்வசதி

யாழ்ப்பாணம்,ஜன.6

தொழில் இழந்துள்ள சமுர்த்தி உதவி பெறும் மீனவக் குடும்பங்களின் வாழ்வாதாரத்திற்கு உதவும் முகமாக அரச சார்பற்ற நிறுவனங்களின் மூலம் மாற்று வேலைகள் வழங்கப்பட்டு வருவதாக கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதனடிப்படையில் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் கரித்தாஸ் நிறுவனமும், சண்டிலிப்பாய், வடமராட்சிப் பகுதிகளில் முறையே கெயர், சேவாலங்கா நிறுவனங்களும் வீதி அபிவிருத்தி, கால்வாய் புனரமைப்பு போன்ற பணிகளில் மீனவத் தொழிலாளர்களை ஈடுபடுத்தி ஊதியம் வழங்கி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் நாள்களில் மேலும் சில நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படவுள்ள வேலைத்திட்டங்களில் அசாதாரண சூழலினால் கடற்றொழிலை இழந்துள்ள தொழிலாளர்களை மாற்று வேலைகளில் இணைப்பதற்கு தாம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் கடற்றொழில் நீரியல் வள அதிகாரி தெரிவித்தார்.

அண்மையில் அரச சார்பற்ற நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட வற்காடு, வெள்ளவாய்க்கால், ஆனைக்கோட்டை உயரப்புலம் வீதி, மாரிசன் கூடல் வீதி வீதி புனரமைப்புக்களின்போது மேற்படி கடற்தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

## துன்னாலை விவசாயிகளுக்கு பாஸ் நடைமுறை

உடுப்பிட்டி,ஜன.6

கரவெட்டி, துன்னாலை, கேவளைப் பிரதேச விவசாயிகள் தமது தோட்டங்களுக்குச் செல்வதற்கு பாஸ் நடைமுறைக்கு வந்துள்ளது.

மேற்படி இடத்தில் அண்மையில் இடம்பெற்ற கிளைமோர் வெடிப்புச் சம்பவத்தை அடுத்து அந்தப் பிரதேசத்திலுள்ள தோட்டங்களுக்குச் செல்ல பாஸ் நடைமுறையை இராணுவத்தினர் செயற்படுத்துவதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

(202-155)

## கைதடியில் படையினர் 'நண்பர்கள் கடை'

கைதடி,ஜன.5

நாவற்குழி அரச உணவுக் களஞ்சியத்திற்கு முன்பாக 'நண்பர்கள் கடை' என்ற பெயரில் விற்பனை நிலையம் ஒன்றை இராணுவத்தினர் புதுவருடத்தன்று ஆரம்பித்துள்ளனர்.

இவ்விற்பனை நிலையத்தில் அரிசி, மா, சீனி மற்றும் சோப் வகைகள் என்பனவும் நியாய விலையில் இராணுவத்தினரால் விற்பனை செய்யப்படுகின்றன.

தினமும் பெருமளவு மக்கள் கைதடி, நாவற்குழி, கோயிலாக்கண்டி, அரியாலை மற்றும் மட்டுவில் ஆகிய பகுதிகளிலிருந்து வந்து வரிசையாக நின்று பொருள்களை கொள்வனவு செய்வதனையும் காணக்கூடியதாக இருக்கின்றது. (1-75)

## தென்மராட்சி வலயத்தில் மாணவர், ஆசிரியர் கௌரவிப்பு

தென்மராட்சி,ஜன.6

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கடந்த ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் நூறுக்கு மேற்பட்ட புள்ளிகள் பெற்ற 200 இற்கு மேற்பட்ட மாணவர்களும் கற்பித்த ஆசிரியர்களும் வலயக் கல்வி அலுவலகத்தினால் கௌரவிக்கப்படவுள்ளனர்.

கௌரவிப்பு நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யுனிசெப் நிறுவன இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி கலந்துகொள்வார்.

வலயப் பாடசாலைகளில் 100 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேற்பட்ட புள்ளிகள் பெற்று சித்திகளைப்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# வடமராட்சியில் காலம் தாழ்த்தி வெங்காயம், புகையிலை செய்கை

வடமராட்சி, ஜன.6

வடமராட்சிப் பிரதேசத்தில் இம்முறை காலம் தாழ்த்தியே புகையிலை, வெங்காயப் பயிர்ச் செய்கை ஆரம்பமாகியுள்ளது.

கடந்த ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் கால போகத்துக்கான வெங்காயப் பயிர்ச் செய்கை மற்றும் புகையிலைச் செய்கைக்கு நடுகையை [illegible] விவசாயிகள் பலரும் [illegible] நடுகை யில் ஈடுபட்டுள்ளனர்.

உற்பத்திகளுக்கான சந்தைவாய்ப்பு இன்மை, பயிர்களுக்கான பசளை, கிருமிநாசினி, நீர் இறைப்பதற்குத் தேவையான மண்எண்ணெய் ஆகியன கிடைக்காமல் போகுமோ என்ற அச்சம் என்பனவற்றின் காரணமாகவே புகையிலை, வெங்காயம் நடுகையில் தாமதம் ஏற்பட்டதெ விவசாயிகள் பலரும் தெரிவித்தனர்.

## நாவற்குழியில் விசேட கிளை திறப்பு

கைதடி,ஜன.5

நாவற்குழி சந்தியிலுள்ள 300 வீட்டுத் திட்டத்தில் தென்மராட்சி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் 5 ஏ கிளை விற்பனை நிலையம் ஒன்று கடந்த நத்தார் தினமன்று தொடக்கம் அப்பகுதி மக்களின் நலன் கருதி திறக்கப்பட்டுள்ளது.

இக்கிளை திறக்கப்பட்டதனால் அப்பகுதியிலுள்ள 250 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் பயன்பெறுவதாக சங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (1-75)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய கிளை நிறுவனத்துடன் நாம்...!

COMPUTER EXPRESS

ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

Jaffna Head office: No 16, [illegible] Lane (off Stanly Rd.) 021-222 8250, 0777 222422

Branch office: No 167, Kasthuriyar Rd. (Near Uthayan Publication) Jaffna.

**Diploma in Hardware Engineering**
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault Finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking Etc..
Course Fee :2000/=

**Diploma in Computerized Accounting**
ACCPAC + Quick Books Premier + MYOB ஆகிய முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்.
Course Fee :3500/=

**Diploma in Video Mixing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter.
Course Fee :3000/=

**Diploma in Graphic Designing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Corel Draw ❖ Cool3D Studio ❖ Macro media Flash MX
Course Fee :2000/=

ஒரே நாளில் ஆரம்பம்:-08/01/2007 - 09.00 AM

மாணவர்களின் நலன்கருதி எமது கிளை நிறுவனத்தினை இல 167,கஸ்தூரியார் வீதியில் (உதயன் பணிமனை அருகில்) ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
வகுப்புகள் அனைத்தும் எமது கிளை நிறுவனத்திலேயே நடைபெறும். அனுமதியினை தலைமையகத்திலும் கிளை நிறுவனத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

3 மாதகால DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING & Tally Accounting Package ஆரம்பமாகிறது.
START ON :- (1) 04/01/2007 (2) 06/01/2007 (3) 07/01/2007 (4) 08/01/2007


## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வு



தாயின் மடியில் 16 . 12 . 1932

கற்பக விநாயகர் அடியில் 26 . 12 . 2006

### சிவஸ்ரீ இ.சபாரத்தினக் குருக்கள்

பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர் தேவஸ்தான ஆதீன கர்த்தாவும் இளைப்பாறிய ஆசிரியப் பெருந்தகையுமான சிவஸ்ரீ இ.சபாரத்தினக்குருக்கள் அமரத்துவம் அடைந்தமை குறித்த ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வு நாளை (07.01.2007) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் மேற்படி தேவஸ்தான மண்டபத்தில் இடம் பெறும். இந் நிகழ்வில் பங்குகொண்டு சிறப்பிக்கும் வண்ணம் அனுதாபிகளை அழைக்கின்றோம்.

பன்னாலை,
தெல்லிப்பழை. (65595) பன்னாலை வாழ் மக்கள்.

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 01 . 11 . 1919

மறைவு 23 . 11 . 2006

### அமரர் சங்கரப்பிள்ளை கார்த்திகேசு

23.11.2006 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்தும் பத்திரிகைகளிலும் மலர் வளையம் வைத்தும் தொலைபேசி மூலமாகவும் ஆறுதல் தெரிவித்தும் மற்றும் சகல வழிகளிலும் உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (06.01.2007) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

பாடசாலை ஒழுங்கை,
மல்லாகம். (65416) குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்



மண்மகிழ 30 . 07 . 1927

விண்நெகிழ 06 . 12 . 2006

### அமரர் வி.கிருஸ்ணபிள்ளை

எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (06.01.2007) சனிக்கிழமை காலை 6 மணிக்கு திக்கம் துளாயிற் பிள்ளையார் கோவிலடியில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அல்வாய் வட மேற்கு,
அல்வாய். (63712) பிள்ளைகள், மருமக்கள், குடும்பத்தினர்.

## 7ஆம் ஆண்டு நினைவுகளில்...



செல்வி
### சுதாஜினி சண்முகசுந்தரம்

மலர்வு 15.01.1977 உதிர்வு 25.12.1999

மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டு
பிரிந்துசென்ற எமதருமைச் செல்வமே
மண்ணில் மறைந்துவிட்ட போதும்
என்றும் நீங்காத உன் நினைவுகளுடன்
எம் இதயங்கள் கனக்கின்றன.

பூதவராயர் வீதி,
திருநெல்வேலி கிழக்கு.
(65551)

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர் (கனடா).

## மரண அறிவித்தல்

### திருமதி பொன்னையா தங்கமலர்

(மானிப்பாய்)

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடாவில் வசித்தவருமாகிய பொன்னையா தங்கமலர் 01.01.2007 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையாவின் *(Tea maker - Upper Balangoda Estate -Your Shop, Manipay)* அன்பு மனைவியும் சரோஜினி, பாலகிருஷ்ணன்(இயக்குநர் *Krisho Multi Trades*), சரஸ்வதி, ருக்மணி, ராதாகிருஷ்ணன், கிருஷ்ணானந்ததேவி, சாவித்திரி, புஸ்பராணி, சுசீலா ஆகியோரின் அருமைத் தாயும் கதிர்காமநாதன், நிருபராணி, ராமச்சந்திரன், பிருதுவிராஜா, பவானி, தேவராஜா,ரவீந்திரநாதன், சிவானந்தன், அன்ரன் ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, இராஜதுரை, தியாகராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும் பொன்மலர், பவானி, தேவிகாராணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் பிரியா, தர்சினி, லோஜினி, *Dr.* சோபனா, கீர்த்தனா, ஹரன், ஹரி, கஜன், துஷ்யன், கோபிகா, அஸ்வன், சிரோமி, சுப்ரதா, லக்சனா, பிரணவன், சத்தியானா, சுஜானா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2007) சனிக்கிழமை முற்பகல் 10 மணி முதல் பி.ப. ஒரு மணிவரை *Penisasia Funeral Home* கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ.பாலகிருஷ்ணன் (மகன்),
கொழும்பு.

*3646 Woodruff Cres,*
*Mississ Auga ON, L4T1T9, Canada,*
*T.P.: 001 905 6779667* (சி-51761)

## பாடசாலையை விட்டு விலகியோருக்கு ஆங்கிலப் பயிற்சி

தென்மராட்சி,ஜன.6

பாடசாலைக் கல்வியை முடித்தோருக்கான இலவச ஆங்கில பயிற்சி வகுப்பு விரைவில் தென்மராட்சி கல்வி வலய ஆசிரிய மத்திய நிலையத்தினால் ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஆரம்ப, இடைநிலை, உயர்நிலை என்னும் பிரிவுகளாக பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இப் பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்ள விரும்புவோர் தமது சுய விபரங்களோடு, கற்க விரும்பும் பிரிவு, பாடசாலையை விட்டு விலகிய திகதி ஆகிய விபரங்கள் அடங்கிய விண்ணப்பத்தினை தயாரித்து எதிர்வரும் 16ஆம் திகதிக்கு முன்னர் வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், தென் [illegible] [illegible] பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 20 . 02 . 1957

மறைவு 07 . 12 . 2006

### சதாசிவம் வேதநாயகம்

குல விளக்காய் ஒளி வீசி குதூகலிக்கச் செய்தீரே
நலமாக இளம் வாழ நல்லன பல செய்தீரே
பலமான உன் உடலை இயமன் பதம்பார்த்து நின்றானோ!
தினம் தினம் கலங்குகின்றோம் நிம்மதியில்லாமல்

எங்கள் குடும்பத் தெய்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு மரணச் சடங்கில் பங்குகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் எங்கள் துயரில் பங்குகொண்டு பல வழிகளிலும் உதவிய அன்பு நெஞ்சங்கள் அனைவருக்கும் எம் இதயம் கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (06.01.2007) சனிக்கிழமை எமது இல்லத்தில் வீட்டுக் கிருத்தியம் நடைபெறும் அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஏழாலை மேற்கு, ஏழாலை. (51540) குடும்பத்தினர்.

## ஐந்தாம் ஆண்டு நினைவுகள்



தோற்றம் 08.05.1952 மறைவு 02.01.2002

அமரர்
### பொன்னையா கணேசலிங்கம்

(மக்கள் வங்கி முன்னாள் முகாமையாளர், பருத்தித்துறை - Estate Management B.Sc. Colombo Campus)

திதி: 06.01.2007

அன்பே உருவாய் நின்றீர்கள்
பண்பே சிகரமாய்ப் பணிபுரிந்தீர்கள்
பாசத்தின் இருப்பிடமாயிருந்த
அப்பாவே
பார்போற்றும் எம் தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கும்

திகிரி,
புலோலி வட கிழக்கு,
பருத்தித்துறை. (51769) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி முத்துலிங்கம்



திருநெல்வேலி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி முத்துலிங்கம் 05.01.2007 அன்று காலமானார்.

அன்னார் தவமணியின் அன்புக் கணவரும், பாஸ்கரன் (மகாநதி புடைவையகம்), தர்மினி (Soft view Computer college) ஆகியோரின் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2007) மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(65629) தகவல்: மு.பாஸ்கரன் (மகன்).

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

### சுந்தரலிங்கம் வினோதன்
(VINO)



படைப்பு 08.07.1983 மறைப்பு 10.01.2004

திதி : திருதியை 06.01.2007

ஆண்டுகள் மூன்று ஆனாலும்
ஆராய்ச்சிகள் ஆறவில்லை தம்பி!
ஆய்வுகள் ஆதா[illegible] அமைந்தாலும்
ஆறாது இதயம் ஆயுள் உள்ளவரை தம்பி!!
ஆக்கத்திற்கு செயற்பட்டு அகிலத்தை - ஆள
நினைத்தாய் தம்பி!!
ஆ! ஆண்டவனும் அணைத்துவிட்டானே!

ஆத்ம சாந்திக்கு ஆண்டவனை
ஆராதிப்போம்.

சு.சுதாகரன்.
பயாிக்கவடல்,
காரைநகர்.
[வெயிலுகந்தபிள்ளையார்]

ஆறாத நினைவுகளுடன்:
ஆருயிர் சுதா அண்ணா, அண்ணி (Germany),
பப்பா, அம்மா.

(65503)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி, தொலைநகல்: 222 9933, 222 3837 - 222 9944

# செத்துப்போன ஒப்பந்தத்தில் தொங்குவதால் பயன் என்ன?

இலங்கையில் யுத்தநிறுத்தம் இன்னும் நடைமுறையில் இருக்கின்றதா என்ற கேள்விதான் பலரின் மனதிலும் இப்போது எழுந்திருக்கின்றது.

ஒருபுறம் அமைதி முயற்சிகளில் தனக்குத் தீவிர ஈடுபாடும் ஆர்வமும் உள்ளன என்று அரசு அறிவிக்கின்றது. யுத்த ஆபத்துப் பிரதேசங்களிலிருந்து யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் விலகி, தமது பணியைச் சுருக்கிக் கொண்டமையை அது கண்டிக்கின்றது. அதனால், யுத்த நிறுத்தத்துக்கு ஆபத்து எனக் நீலிக் கண்ணீரும் வடிக்கிறது.

மறுபுறம், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகள் மீது தினசரி விமானத் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. ஒருநாள் மன்னாரில். அடுத்தநாள் முல்லைத்தீவில். மூன்றாம் நாள் அலம்பிலில். இப்படி முனைப்பான வான்வழித் தாக்குதல் தினசரி விவகாரமாகிவிட்டது.

அது மட்டுமல்ல.

யுத்த நிறுத்தம் நடைமுறையில் இருப்பதாகக் கூறிக் கொண்டு இந்தத் தாக்குதல்கள் நடத்தப்படுவது மட்டுமல்லாமல், 'அடையாளம் காணப்பட்ட விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது வான் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன' என்ற 'ஸிம்பிளான' அறிவிப்பு - அறிக்கை - வேறு. அதுவும் அரசினால் உத்தியோகபூர்வமாக - பகிரங்கமாக - ஒழுங்குதவறாமல் - வெளியிடப்படுகின்றது.

யுத்த நிறுத்த உடன்பாட்டில் - கறுப்பு வெள்ளையில் - எழுத்தில், - கூறப்பட்டுள்ளமைக்கு மாறாக யாழ். குடாநாட்டுக்கான தரைவழிப்பாதையை மூடிவைத்திருக்கின்றது இலங்கை அரசு. இதனால், ஆறுலட்சம் குடாநாட்டுத் தமிழ்மக்கள் பட்டினிச்சாவை எதிர்கொள்ளும் பெரும் மனிதப் பேரவலம் தொடர்ந்துகொண்டிருக்கிறது.

இப்படிஎல்லாம் செய்துகொண்டு யுத்தநிறுத்தம் நடைமுறையில் இருப்பதாகக் கூறிக்கொள்வதைப் புரிந்துகொள்ள முடியாமல் தடுமாறுகின்றார்கள் தமிழர்கள்.

மேலும், யுத்த நிறுத்தம் நடைமுறையில் இருப்பதாகக் கூறப்படும் இந்தக் காலகட்டத்தில்தான் கிழக்கில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் பிரதேசங்களைப் படை நடவடிக்கைகள் மூலம் கொஞ்சம் கொஞ்சமாகக் கைப்பற்றி வருகின்றன அரசுப்படைகள்.

முதலில் மூதூர், சம்பூரில் ஆரம்பித்த இந்த நகர்வு இப்போது வாகரையை நெருங்கிவிட்டது.

யுத்த நிறுத்தம் நடைமுறையில் இருப்பதாகக் கூறப்படும் இந்தவேளையில்தான் யுத்த வெற்றி தொடர்பான சூளுரைகளை அரசுப்படை அதிகாரிகள் பகிரங்கமாக விடுக்கின்றார்கள்.

"அடுத்த மார்ச் மாதத்துக்குள் கிழக்கிலிருந்து புலிகளை முற்றாக விரட்டிவிடுவோம். அதன் பின்னர் கிழக்கில் புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேசம் என ஒன்று இருக்காது" - என இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா பகிரங்கமாக - உத்தியோகபூர்வமாக - சூளுரைப்பதும் இந்தக் காலப்பகுதியில்தான்.

யுத்த முஸ்தீபுகள் மட்டுமல்லாமல், யுத்த நடவடிக்கைகள் முனைப்போடும் முழுவீச்சோடும் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இவ்வேளையில், யுத்தநிறுத்தமும் நடைமுறையில் இருப்பதாகக் கூறப்படுவதை விளங்கிக்கொள்ள முடியாமல் தடுமாறுகிறார்கள் தமிழர்கள்.

அரசுப் படைகளின் தாக்குதல் நடவடிக்கைகளும்,யுத்த நெருக்குவாரங்களும் தீவிரமடைந்து கொண்டிருக்க, 'அமைதி முயற்சிகளுக்கு வாய்ப்பளித்துக் காத்திருக்கிறோம்' - என்ற பெயரில் புலிகள் தரப்புக் கூறிவருவது ஏன் என்பதும் தமிழர்களுக்கு ஒன்றுமாகப் புரியவில்லை.

ஒருபுறம் போர்; மறுபக்கம் சமாதான முயற்சி - என்ற இரண்டுங்கெட்டான் நிலைமை நீடிக்கின்றது. தமிழர் தாயகத்தில் தினசரி சாவுகள். படுகொலைகள். வன்முறைகள். அழிவுகள் தாராளம்.

யுத்தம் நிறுத்தப்பட்டிருப்பதாகக் கூறப்படும் இந்தக் காலத்திலும் தமிழர் தாயகம் மரணங்கள் மலிந்த பூமியாகவே நீடிக்கின்றது.

தீர்க்கமான ஒரு முடிவு எட்டப்படாமல், இப்படி அதுவும் இல்லாமல், இதுவும் இல்லாமல் இழுபடுவதால் வேதனை அப்பாவி மக்களுக்குத்தான். அதுவும் பெரும்பாலும் தாயகத் தமிழர்களுக்குத்தான்.

அமைதி முயற்சிகளின் பேரில் ஒடிக்கழிந்த இந்த ஐந்து ஆண்டுகளும் தமிழர்களின் வாழ்வில் பேரிருள் சூழ்ந்த - இரத்தம் தோய்ந்த - அழிவுகளும் அவலங்களும் நிறைந்த - அவக் காலமாகவே மாறியிருக்கின்றது.

இந்தக் கொடூரமும், பேரிடரும் இன்னும் எவ்வளவு காலத்துக்குத் தொடரப்போகின்றன?

அமைதி முயற்சிகளில் ஈடுபட வேண்டிய தரப்புகள் இரண்டுக்கும் இடையிலான பகையுறவும், விரோதமும் உச்சக்கட்டத்தை அடைந்திருக்கும் இந்தச் சூழலில் இரு தரப்பும் பேச்சு மேசைக்குத் திரும்பி சமாதான எத்தனங்களை மீள ஆரம்பிப்பது துர்லபம் என்பது பெரும்பாலும் உறுதியாகிவருகின்றது. மீள இணக்கத்துக்கு வரமுடியாத வேறுபாட்டை - முரண்பாட்டை - நோக்கி இருதரப்புகளும் விலகியுள்ள நிலையில் அமைதி முயற்சி என்ற கண்துடைப்பின் பெயரால் காலம் இழுபடுகின்றது. அதனால் அதிகம் அந்தரிப்பவர்கள் அப்பாவி மக்கள்தான்.

*"அரசுத்தரப்பின் போர்முனைப்புச் செயற்பாட்டால் போர்நிறுத்த ஒப்பந்தம் செத்துச் செயலிழந்து போய்க்கிடக்கின்றது. ஒப்பந்தம் கிழிக்கப்படாமலேயே உக்கிப்போன தாளாகி உருக்குலைந்து கிடக்கின்றது. புலிகளின் இலக்குகள் மீதான மும்முனைத்தாக்குதல் தொடரும் என அறிவித்து மஹிந்த அரசு ஒப்பந்தத்திற்கு ஈமைக்கிரியைகளையும் நடத்தி முடித்திருக்கின்றது."* - எனப் புலிகளின் தலைவர் பிரபாகரனே சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

இப்படி 'செத்துப்போன' ஒப்பந்தத்தில் தொங்கிக்கொண்டு காலத்தை இழுத்தடிப்பதில் நேரும் இப்போதைய அயத்தை இன்னும் எவ்வளவு காலத்துக்கு அனுபவிப்பது?

தமிழ் மக்களை அன்றாடம் குடையும் கேள்வி இதுதான்.

# பல்கலை. மாணவரை விடுவிக்குமாறு மாணவர் அமைப்புகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.6

பல்கலைக்கழக விஞ்ஞான பீட இறுதிவருட மாணவன்அ.நிருபராஜை விடுதலை செய்யுமாறு கோரி -

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியம், சர்வதேச தமிழீழ மாணவர் ஒன்றியம், தமிழ் மாணவர் ஒன்றியம் ஆகியனவும் தனித்தனியாக அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.

தொடர்ச்சியாக எமது பல்கலைக் கழக மாணவர்கள் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யாமல் தடுத்து வைத்திருப்பதன் மூலம்நாம் கல்வி கற்பதற்கான சூழல் இல்லாமல் போகின்றது. அத்தோடு எமது மாணவர்கள் உள ரீதியாகவும் அச்சமுற்ற நிலையில் இருக்கிறார்கள். ஏனவே கைது செய்யப்பட்ட அனைத்து பல்கலைக் கழக மாணவர்களையும் உடனடியாக விடுதலை செய்து இயல்பான கல்விக்கு உதவி செய்யுமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம் - என்று கலைப்பீட மாணவர் ஒன்றியம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கொக்குவில் பகுதியில் வைத்து யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட இறுதி வருட மாணவன் அருணகிரிநாதன் நிருபராஜ் கடத்தப்பட்டுள்ளார். மாணவர்களாகிய எம்மீது அரசுகாட்டும் வன்முறை போக்கை மிக வண்மையாகக் கண்டிக்கின்றோம். மாணவர்கள் மீது வன்முறையை கையாண்டும் மாணர்களின் தேவைகளை நிவர்த்தி செய்யாமலும் அடக்குமுறைப் பாதையில் பயணிக்கும் அரசின் செயற்பாட்டினை திட்டமிட்ட கல்வி ஒடுக்கு முறையாகவே பார்க்கின்றோம்.

அரசு மாணவர்களை கொலை செய்வதை நிறுத்தி கடத்தப்பட்ட மாணவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் - என்று தமிழ் மாணவர் ஒன்றியம்தனது அறிக்கையில் வலியுறுத்தியுள்ளது.

கடந்த 03.01.2007 அன்று தனது வீட்டில் வைத்து யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட இறுதி ஆண்டு மாணவன் அருணகிரிநாதன் நிருபராஜ் ஸ்ரீலங்கா இராணுவத்தால் கைது செய்யப்பட்டுள்ளார். இவரை இராணுவம் விடுதலை செய்யவேண்டும்.

கடந்த ஐந்து மாத காலங்களாக கற்றல் செயற்பாடுகள் இடைநிறுத்தியுள்ள யாழ். பல்கலைக்கழகம் மீண்டும் தனது கல்விச் செயற்பாடுகளை எதிர்வரும் 22.01.2007 அன்று ஆரம்பிக்க உள்ள நிலையில் பல்கலைக்கழக மாணவன் கடத்தப்பட்டுள்ளமை பல்கலைக்கழக செயற்பாடுகளுக்கு குந்தகம் விளைவிக்கும் ஒன்றாகும் இது பல்கலைக்கழக கல்விச் செயற்பாட்டினை குழப்புவதற்காகவே முன்னெடுக்கப்பட்ட ஒன்று எனவே, உரிய தரப்பினர் மாணவனை விடுதலை செய்வதோடு மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்கு குந்தகம் விளைவிக்கும் நடவடிக்கைகளை நிறுத்தவேண்டும் - என்று தமிழீழ மாணவர் பேரவையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பங்கீட்டு அட்டைக்கு உருளைக் கிழங்கு

யாழ்ப்பாணம்,ஜன.6

கப்பல் மூலம் கொண்டுவரப்பட்டுள்ள இருநூறு மெற்றிக்தொன் உருளைக்கிழங்கு மக்களுக்கு பகிர்ந்து விநியோகிக்கப்படும்.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள எடையுள்ள உருளைக் கிழங்கை அரச உணவுக் களஞ்சியத்திலிருந்து இன்று பெற்றுக்கொள்ளுமாறு அரச அதிபர் கேட்டுள்ளார்.

ஒன்று முதல் இரண்டு அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு - அரைக்கிலோ, மூன்று தொடக்கம் நான்கு அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு - ஒரு கிலோ, ஐந்து அங்கத்தவர்களுக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு - ஒன்றரைக் கிலோ என்ற வீதத்தில் பங்கீட்டு அட்டைக்கு உருளைக் கிழங்கு வழங்கப்படவுள்ளது.

நாளை தொடக்கம் உருளைக்கிழங்கு விநியோகத்தை ஆரம்பிக்குமாறு அரச அதிபர் அறிவுறுத்தியுள்ளார். (அ)

# கூட்டுறவு சமாசத்தில் இன்று விநியோகம்

யாழ்ப்பாணம்,ஜன.6

யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்க சமாசத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் அத்தியாவசியப் பொருள் விநியோகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை வழங்கப்பட்ட 100 இலக்கங்களுக்கான பொருள் விநியோகம் இன்று சனிக்கிழமை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது நேற்று வழங்கப்பட்ட இலக்கங்களில் 51 முதல் 150 வரையான இலக்கங்களைக் கொண்டவர்களுக்கு இன்று பொருள் விநியோகிக்கப்படும் என்று அதன் தலைவர் அறிவித்துள்ளார்.

அத்துடன், இன்று சனிக்கிழமை முன்னுரிமை அடிப்படையில் 100 அரச ஊழியர்களுக்கும் நாளை ஞாயிற்றுக்கிழமை அரச ஊழியர்களுக்கு முழு நாளும் பொருள் விநியோகம் நடைபெறும் என்றும், முன்னைய விநியோகத்தில் பொருள்களைப் பெற்றுக்கொள்ளாத தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த மக்களுக்கான விநியோகம் மேற்கொள்ளப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த மக்களுக்கு இம்மாதம் 15ஆம், 22ஆம் திகதிகளில் பொருள்கள் விநியோகிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொருள் விநியோகத்தின்போது பங்கீட்டு அட்டை, அடையாள அட்டையுடன் பரிசோதித்துப் பார்க்கப்படும் எனவும் தலைவர் அறிவித்துள்ளார்.(1-8)

# முகாமைத்துவ உதவியாளர் பரீட்சை நிலையங்கள் மாற்றப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம்,ஜன.6

அரச முகாமைத்துவ உதவியாளர் வகுப்பு III இற்கு ஆள்சேர்ப்பதற்கான போட்டிப்பரீட்சையின் பரீட்சை நிலையங்கள் மாற்றப்பட்டுள்ளன.

வேம்படி மகளிர் கல்லூரியில் இன்று இடம்பெறவிருந்த பரீட்சைகள் சென். மேரிஸ் வித்தியாலயம், யாழ். மத்திய கல்லூரி, திருக்குடும்ப கன்னியர்மடம் ம.வி. ஆகியவற்றுக்கு மாற்றப்பட்டுள்ளதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். (அ-1)

# இந்தியாவில் கொள்வனவான பொருள்கள் இறக்கப்படுவதை அமைச்சர் டக்ளஸ் பார்வையிட்டார்

யாழ்ப்பாணம்,ஜன.6

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்றை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்ட முயற்சியின் பயனாக இந்தியாவிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஒருதொகை உணவுப் பொருள்கள், முதற்கட்டமாக யாழ். பருத்தித்துறைத் துறைமுகத்தை வந்தடைந்துள்ள நிலயில், அவை கப்பலில் இருந்து இறக்கப்படுவதை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று நேரில் சென்று பார்வையிட்டார்.

சமூக சேவைகள் அமைச்சு வெளியிட்ட செய்திக் குறிப்பில் இத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டில் நாளாவித உணவுப் பொருள்களுக்கு நிலவும் தட்டுப்பாட்டைக் குறைக்கும் நோக்கில் இலங்கை அரசு கொள்வனவு செய்துள்ள மேற்படி உணவுப் பொருள்களை உரிய முறையில் பொதுமக்களுக்குக் கிடைக்கக் கூடிய வகையில் விநியோகம் செய்வது குறித்தும் அமைச்சர் தற்போது விசேட அவதானங்களைச் செலுத்தி வருகின்றார்.

நேற்றையதினம் அமைச்சருடன் யாழ். அரச அதிபர், யாழ். மாவட்ட இராணுவக் கட்டளையிடும் அதிகாரி மற்றும் யாழ். சிவில் அலுவல்கள் இணைப்பதிகாரி ஆகியோரும் சென்று கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கப்படுவதை பார்வையிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும் - என்று செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-1)

**நாளை**

மார்கழி - 23
ஞாயிற்றுக்கிழமை
07.01.2007
திதி : சதுர்த்தி
முன்னிரவு 10.45
நட்சத்திரம் : மகம்
பின்னிரவு 03.19
[illegible] 09.32 - 11.02
[illegible] : 05.03 - 06.33

# பாடசாலை பருவச்சீட்டு கால எல்லை நீடிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.6

இலங்கை போக்குவரத்துச் சபை (வடக்கு) பாடசாலை மாணவர்களுக்கு பருவகாலச் சீட்டுக்களை வழங்குவதற்கான காலத்தை எதிர்வரும் 15ஆம் திகதிவரை நீடித்துள்ளது.

இத் தகவலை இலங்கை போக்குவரத்துச் சபையின் (வடக்கு) செயலாற்று முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

பாடசாலை அதிபர்களை எதிர்வரும் 15ஆம் திகதிவரை பருவகாலச் சீட்டுக்களைப் பெற விண்ணப்பிக்கலாம் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (1-203)

# கொக்குவிலில் இளைஞன் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம்,ஜன.6

கொக்குவில் கிழக்கு, ஆடியபாதம் வீதியில் நேற்றுக்காலை 8.15 மணியளவில் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

கொக்குவில், கோயில் வீதியைச் சேர்ந்த நவரட்ணம் மனோராஜ் (வயது 26) என்பவரே கொல்லப்பட்டவராவார்.

இவர் குறிப்பிட்ட வீதியில் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த போது மற்றுமோர் மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் இவரைச் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (1-68-202)

# பருத்தித்துறையில் கிரனேட் வீச்சு

யாழ்ப்பாணம்,ஜன.6

பருத்தித்துறை சாரையடியில் நேற்று முற்பகல் 10.30 மணிக்கு கிரனேட் வீச்சுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

இக்கிரனேட் வீச்சில் ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து தெரியவரவில்லை.

இதேவேளை -

மேற்படி சம்பவத்தையடுத்து அப்பிரதேசத்தில் படையினர் சுற்றிவளைப்புத் தேடுதல்களை நடத்தினர்.

(202-115-15)

# வழங்கற்கட்டளை பெறுமாறு அறிவுறுத்து

கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ள பொருள்களை ப.நோ.கூ. சங்கங்கள் மற்றும் தனியார் கடைகள் ஊடாக விநியோகிப்பதற்கான வழங்கற் கட்டளைகளை இன்று முதல் பெற்றுக்கொள்ளுமாறு சங்கங்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

யாழ். செயலக புனர்வாழ்வு, புனரமைப்பு செயலகத்தில் இன்று காலை 9.30 மணிமுதல் 10.30 மணிக்கிடையில் வழங்கற் கட்டளைகளைப் பெற்றுக்கொள்ளும்படியும் -

உடன் களஞ்சியத்தில் இருந்து பொருள்களைப் பெற்றுக்கொள்ளும்படியும் - அரச அதிபர் சகல ப.நோ. கூ. சங் கங்களையும் அறிவுறுத்தியுள்ளார்.

(அ-1)

# சூட்டுக்கு இலக்கானவர் நேற்று மரணம்

யாழ்ப்பாணம்,ஜன.6

நேற்றுமுன்தினம் பருத்தித்துறை திக்கத்தில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் படுகாயமுற்றவர் நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் மரணமானார்.

ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு இருந்தவரான இரண்டு பிள்ளைகளின் தந்தையான க.சற்குணம் என்பவரே மரணம் அடைந்தவர் ஆவார்.

(1-155-68)

# இராஜவீதியில் சூட்டுக்கு காயம்

யாழ்ப்பாணம்,ஜன.6

நேற்றுக்காலை 8 மணியளவில் கோப்பாய் இராஜவீதியில் இடம்பெற்ற சூட்டுச் சம்பவம் ஒன்றில் இளைஞர் ஒருவர் காயமடைந்தார்.

அதேயிடத்தைச் சேர்ந்த என்.மகேஸ்வரன் (வயது 26) என்பவரே காயமடைந்தார்.

இவர் தனது வீட்டிலிருந்து வெளியில் புறப்பட்டவேளை மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாதோர் இவரைச் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (202-68)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரக்குறைவான ஆயுத விநியோகம் என்பதை மறுக்கின்றது பாகிஸ்தான்

கொழும்பு, ஜன. 06

ஸ்ரீலங்காவிற்கு தரக்குறைவான ஆயுதங்களை பாகிஸ்தான் விற்பனை செய்துள்ளதாக கொழும்பு ஊடகங்கள் வெளியிட்ட தகவல்களை ஸ்ரீறிலங்காவுக்கான பாகிஸ்தான் தூதரகம் மறுத்துள்ளது.

இது தொடர்பாக தூதரகம் தெரிவித்துள்ளதாவது:-

பாகிஸ்தானின் ஆயுதங்கள் மிகச் சிறந்த தரம் வாய்ந்தவை, சிக்கனமானவை, இலகுவாக பயன்படுத்தக்கூடியவை. எமது ஆயுதப்படைகளின் தேவையையும் பாகிஸ்தான் நிறுவனங்கள் தான் பூர்த்தி செய்கின்றன.

இந்த அறிக்கையை வெளியிட்டவர்களின் நம்பகத்தன்மையில் சந்தேகம் உள்ளது. சிறிலங்காவின் பாதுகாப்புத் துறை அதிகாரிகள் இது தொடர்பாக எம்முடன் தொடர்பு கொள்ளாமல் மூன்றாவது நாட்டுடன் கருத்துக்களை பகிர்ந்தது எமக்கு ஆச்சரியமாக உள்ளது. ஏனெனில் எமக்கும் ஸ்ரீறிலாங்காவிற்கும் இடையில் ஆழமான நட்புறவு உள்ளது.

பாகிஸ்தான் 500 மில்லியன் டொலர் பெறுமதியான ஆயுதங்களை ஆசிய, ஆபிரிக்க, மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் சில ஐரோப்பிய நாடுகளுக்கு ஆண்டு தோறும் ஏற்றுமதி செய்து வருகின்றது.

பாகிஸ்தானின் ஆயுத உற்பத்தி நிறுவனங்கள் பாதுகாப்பு அமைச்சுடன் நேரடியான கட்டுப்பாட்டில் உள்ளவை. எனவே ஊழல்கள் இடம்பெறுவதற்கு வாய்புக்கள் இல்லை என்று தூதரகம் தெரிவித்துள்ளது. (ஐ-2)

# சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கும்பணி திங்களன்று மீண்டும் ஆரம்பம்

சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான எழுத்து மற்றும் செயன்முறைப் பரீட்சைகள் நாளைமறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் நடைபெறவுள்ளதாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் அறிவித்துள்ளது.

சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ள விண்ணப்பம் செய்த பரீட்சார்த்திகள் திங்கட்கிழமை முதல் யாழ்ப்பாணம் செயலகத்தில் உள்ள மோட்டார் திணைக்களத்துக்குச் சென்று தமது பரீட்சைகளுக்கான திகதிகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

எழுத்து மற்றும் செயன்முறைப் பரீட்சைக்கு திங்கட்கிழமை தோற்றவிரும்புவோர் அன்று முற்பகல் 10 மணிக்கு முன்னர் உரிய ஆவணங்களுடன் சமுகமளிக்க வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது. (அ-1)

## பங்கீட்டு அட்டைக்கு நானாவிதப் பொருள்கள்

தென்மராட்சி,ஜன.6

தென்மராட்சிப் பிரதேச பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைக் கடைகளில் சவர்க்காரம், நெஸ்ரோமோல்ட், ஹோர்லிக்ஸ் பால்மா உட்பட நானாவிதப் பொருள்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் வழங்கப்படவுள்ளன.

செத்தல் மிளகாய், மல்லி, பெருஞ்சீரகம், நற்சீரகம், மீன்ரின், தேங்காய்ப் பால்மா, தேயிலை உட்பட 13 பொருள்கள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

## இராணுவ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேரும் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்கள் தொடர்பான விசாரணைகள் பூர்த்தியாகவில்லை என இவர்களை நீதிமன்றில் ஆஜர் செய்த குற்றப் புலனாய்வுப் பொலிஸார் தெரிவித்தமையை அடுத்து, அவர்களைத் தொடர்ந்து மேலும் ஒரு மாத காலத்துக்கு தடுத்து வைத்திருப்பதற்கான உத்தரவை பிரதம நீதிவான் விடுத்தார்.

மேற்படி மேஜரிடமிருந்து கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படும் 25 லட்சம் ரூபா பணம் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஏழு சந்தேக நபர்களினதும் வங்கிக் கணக்குகளும் நீதிமன்ற உத்தரவின் பேரில் முடக்கப்பட்டுள்ளன. (உ)

## தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் வவுனியா அலுவலக நிர்வாக அதிகாரி சத்தியமூர்த்தி, திட்ட அலுவலர் பி.தேவராஜா, கணக்காளர் நிரோஷா, அலுவலக உதவியாளர் பிரியா ஆகிய நால்வருமே கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

அலுவலகத்தில் இருந்த அனைத்து ஆவணங்களும் வவுனியா பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## விவசாய அலுவலர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்த விவசாயத்திணைக்கள உத்தியோகத்தர்கள் இருவரும் தங்கள் வாகனத்தில் வவுனியா இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்து நெடுங்கேணி மற்றும் நைனாமடு பகுதிகளில் பழமரக்கன்றுகளை விவசாயிகளுக்கு விநியோகிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

விவசாய உத்தியோகத்தர்களான தர்மலிங்கம் கணேசலிங்கம் (வயது-60), வெற்றிவேல் மகேந்திரன் (வயது-52) ஆகிய இருவருமே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்திருக்கின்றனர்.

சித்திரவேலாயுதம் (சாரதி), குருகுலசிங்கம் ஆகிய இரு பணியாளர்கள் காயமடைந்துள்ளனர். இருவரும் வவுனியா மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டிருக்கின்றனர்.

இவர்கள் இருவருக்கும் பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளன. சிறு காயங்களுக்கு இலக்கான மூன்றாவது நபர் நெடுங்கேணி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றார்.

இராணுவத்தின் ஆழ ஊடுருவும் படையினரே இந்தக் கிளைமோர் தாக்குதலை நடத்தியுள்ளனர் என்று விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்[illegible]ஞ்சாட்டினார்.

அனுராதபுர[illegible] பதவியா எல்லைக்கிராமத்தில் இருந்தே தங்கள் பகுதிக்குள் ஆழ ஊடுருவும் படையினர் ஊடுருவி இத்தாக்குதலை நடத்தியிருக்கின்றனர் என்றும் புலிகள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் அரசபடைத்தரப்புத் தகவல்கள் எதுவும் உடனடியாக கிடைக்கப் பெறவில்லை. (ஐ)

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாலைக்கு கொண்டுசெல்லப்பட்டார்.

இந்தச் சம்பவத்தின் பின்னர் அந்தப் பகுதியில் பரவலாக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. இதனால் பிரதேச வாசிகள் பதற்றமடைந்தனர்.

இதேவேளை -

மன்னார் வீதியில் சாளம்பைக்குளம் என்ற பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 10.30 மணிக்கு மேற்கொள்ளப்பட்ட மோட்டார் தாக்குதல் காரணமாக இரண்டு பொலிஸார் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் வவுனியா பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுப் பின்னர் அநுராதபுரம் கொண்டுசெல்லப்பட்டனர். (ஐ-312)

## வெலிக்கடையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூவாயிரம் ரூபா பணத்தையும் பெற்றுக் கொண்டனர் என்பது தெரியவந்ததை அடுத்தே இந்த ஊர்காவல் படையினர் மூன்று தினங்களுக்கு முன்னர் கைதுசெய்யப்பட்டனர்.

வெலிஓயா கட்டுவன்வில பகுதியைச் சேர்ந்த இந்த ஊர்காவலர்கள் இருவரும் ஊர்காவல்படையில் ஐந்து வருடங்கள் சேவையாற்றியவர்கள் என்று கூறப்படுகிறது.

பஹாரி நாஸிர், சுலைமான் லெவ்வை ஆகிய இந்த இருவரது வீட்டின் அருகே பற்றைக்குள் இருந்து ஏ-கே. ரக துப்பாக்கியும், அவற்றுக்குரிய 20 ரவைகளையும் படையினர் கைப்பற்றியுள்ளனர் என்று கூறப்படுகிறது. (ஐ)

## பல்கலை. மாணவனை விடுவித்தால்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அச்சத்தினையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

எமது பல்கலைக்கழக செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பது தொடர்பிலே விருப்பமில்லாத சக்திகளின் சதி வேலையாகவே இதனை உணருகின்றோம். எமது மாணவர்களுக்கு எதிரான அடக்குமுறைகள் தொடரும் வேளையிலும், நாம் எமது எதிர்கால நலன்கருதி எமது மாணவர்களின் ஒருமித்த அழுத்தத்தை பல்கலைக் கழக நிர்வாகத்திற்கு தெரிவித்ததன் விளைவாகவே பல்கலைக்கழகத்தை ஆரம்பிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது.

கடந்த 11.08.2006 இற்குப் பின்னர் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையைத் தொடர்ந்து 15.08.2006 அன்று எமது விஞ்ஞானபீட மாணவன் சின்னையா சிவசங்கர் பல்கலைக்கழக மைதானத்திற்கு அருகில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டார். பின் 19.08.2006 பல்கலைக்கழகம் சோதனையிடப்பட்டபோது எமது கலைப்பீட மூன்றாம் ஆண்டு மாணவன் சிவராசா பகீரதன் படையினரால் கைதுசெய்யப்பட்டு இதுவரை நீதிமன்றத்தில் முன்நிறுத்தப்படாது சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார். அத்தோடு 19.11.2006 அன்று அல்லைப்பிட்டியில் வைத்து கலைப்பீட மாணவன் மார்க்கண்டு சசிக்குமார் கடத்தப்பட்டு அவரது நிலை தொடர்பாக இது வரை எதுவித தகவல்களும் இல்லை.

### சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது

இந்நிலையில் 03.01.2007 அன்று விஞ்ஞானபீட இறுதியாண்டு மாணவன் அருணகிரிநாதன் நிருபராஜ் காணாமல் போய் இதுவரை அவர் தொடர்பாக எந்தவிதமான தகவல்களும் இல்லை.

இவர் தனது இருப்பிடத்தில் வைத்துக் காணாமல் போயுள்ளமையும் அதற்கு முன் அவ்விடம் இராணுவத்தினரின் சுற்றிவளைப்புத் தேடுதலுக்குள்ளானமையும் இவரது காணாமல்போதல் தொடர்பாக எமக்கு பல சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது. இவரது காணாமல்போனமை தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவரது விடுதலை தொடர்பாக விரைந்து நடவடிக்கை எடுக்கும்படி சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினருக்கும் வேண்டுகோள் விடுக்கின்றோம். இவரது விடுதலையை அடுத்தே எமது பல்கலைக்கழக செயற்பாடுகள் ஆரம்பிப்பது தொடர்பாக தீர்க்கமான முடிவுகளை எடுக்கமுடியும் என நிர்வாகமும் மாணவர்களும் முடிவெடுத்துள்ளனர். எனவே, எமது மாணவர்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு எமது உரிமைகளுக்கு மதிப்பளித்து தயவுசெய்து எமது மாணவரின் விடுதலை தொடர்பில் நடவடிக்கை எடுக்கக் கோருகிறோம்.

இந்தச் சூழ்நிலை காரணமாக எமது மாணவர்கள் தமது பாதுகாப்புத் தொடர்பாக சிந்திக்க தலைப்படுவதன் விளைவு விரும்பத்தகாத விளைவுகளையே ஏற்படுத்தும் என்பது எமது அனைவரதும் எதிர்காலத்தையே பாதிப்புக்குள்ளாக்கும் விடயமாகும் என்பதனையும் கவனத்தில் கொள்ள வேண்டுகிறோம்.

பாதுகாப்பு தொடர்பாக இராணுவத் தளபதி துணைவேந்தருக்கு சில உறுதிமொழிகளை வழங்கிய பின்னர் இவ்வாறானதொரு சம்பவம் நடைபெற்றமை மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது - என்றுள்ளது. (அ)

## அமெரிக்காவுக்கு எதிராக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றுதிரண்டு மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் உருவப்படங்களைக் கொண்டு மாடுகளை அலங்கரித்து அந்த மாடுகளை கொள்ளுப்பிட்டியில் உள்ள அமெரிக்கத் தூதரகம் வரை பேரணியோடு அழைத்துச் சென்றனர்.

மருதானை ஜும்ஆ பள்ளிவாசலில் ஜும்ஆ தொழுகையை அடுத்து பிற்பகல் 1.30 மணியளவில் அப்பள்ளிவாசலின் முன்பாக ஒன்றுகூடிய முஸ்லிம்கள் அங்கிருந்து டீன்ஸ் வீதி வழியாக கொள்ளுப்பிட்டியில் உள்ள அமெரிக்கத் தூதரகம் நோக்கிப் பேரணியாகச் சென்றனர்.

கொள்ளுப்பிட்டிச் சந்தியில் வைத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் அமெரிக்கத்தூதரகத்தை நெருங்காதவாறு பொலிஸார் தடைகளைப்போட்டு அவர்களைத் தடுத்து நிறுத்தினர். அந்த இடத்தில் ஆர்ப்பாட்டம் தொடர்ந்தது. புஷ்ஷின் கொடும்பாவியும் எரிக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் முன்னாள் கொழும்பு மாநகரசபையின் பிரதி மேயர் அஷாட் ஷாலி உள்ளிட்ட பல அரசியல் தலைவர்கள் மாத்திரம் அமெரிக்கத் தூதரகத்திற்குள்ளே சென்று அமெரிக்கத் தூதரக கவுன்ஸலரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

### கிழக்கில்

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் பொம்மைகள் அம்பாறை மாவட்டத்தின் முஸ்லிம் பிரதேசங்கள் பலவற்றில் தூக்கில் தொங்கவிடப்பட்டன.

நேற்று வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகையின் பின் ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைனுக்கு நிறைவேற்றப்பட்ட மரண தண்டனையைக் கண்டித்தும், அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷைக் கண்டித்தும் கிழக்கின் முஸ்லிம் பிரதேசங்களில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.

ஜோர்ஜ் புஷ்ஷின் கொடும்பாவிகள் பிரதான வீதிகளில், மின் கம்பங்களிலும், தூண்களிலும் காலையிலிருந்தே கட்டப்படிருந்தன. கொடும்பாவிகளில் 'பயங்கரவாதி புஷ்' எனும் வாசகங்களும் எழுதப்பட்டிருந்தன.

பாலமுனை, அட்டாளைச்சேனை முதலான பகுதிகளில் புஷ் தூக்குக் கயிற்றில் தொங்குவது போல் கொடும்பாவிகள் தொங்கவிடப்பட்டிருந்தன.

அரச அலுவலகங்கள், வங்கிகள், வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன. கல் முனை - அக்கரைப்பற்று, கல்முனை - அம்பாறை பிரதான வீதிகளில் பயணிகள் பஸ் சேவைகளும் நடை பெறவில்லை. (ஐ-7-241-297-220)


மானிப்பாயில்

Personal Classes & Group Class

* aat:
Stage 1
Stage 2
(In English Mediam)
* Computerised Accounting Pacakages
(Accpac, Quickbook, tally)
* A/L, O/L கணக்கீடு

தொடர்புகளுக்கு: UNI Technology Manipay

(மானிப்பாய் பிரதேச சபைக்கு எதிராக)

தமிழ் தகவல் தொழில் நுட்ப ஒருங்கமைப்பு நிர்வாகத்தின் கீழ்
கிராமிய தகவல் தொழில்நுட்ப பயிற்சி நிலையமும்
ஆங்கில கற்கை நிலையமும்

140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். | 114, டச்சு வீதி, சாவகச்சேரி.

சேவை நோக்குடன் குறைந்த கட்டணத்தில்

O/L பரீட்சைக்கு தோற்றிய பாடசாலை மாணவர்களுக்கு ICT, GIT படத்திட்டத்திற்கு அமைவாக

"Information Technology (IT)"

பாட நெறி ஜனவரி இரண்டாம் வாரத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஏனைய எமது பயிற்சி நெறிகளும் ஆரம்பம்
காலம்: 3 - 4 மாதங்கள்
மேலதிக விவரங்களுக்கு பயிற்சி நிலையத்திற்கு நேரில்



பிரத்தியேக வகுப்பு

புவியியல் A/L - 2009

ஆசிரியர்:
N.S.சங்கர்
B.A. (Hons) Geog.

ஆரம்பம்: 06.01.2007
SAT. 4 p.m.

மயிலணி சிவன்கோயில் முன்
சுன்னாகம்.



| A/L 2009 | கணக்கீடு திரு. பாலகஜன் | A/L 2009 |
|---|---|---|
| BEACON | - யாழ்.நகர். - 9 A.M. 11 A.M. | |
| BRAIN POWER | - சுன்னாகம் - 5 P.M. | |
| RADIANT | - அரியாலை - 6.30 A.M. | |
| NIRU | - கோண்டாவில் - 1 P.M. | |
| SAAJI | - திருநெல்வேலி - 4 P.M. | |

ஆரம்பம்: 07.01.2007 ஞாயிறு

அடிப்படை அறிவில்லாதவர்களுக்கு கூடிய கவனம் எடுக்கப்படும்.

O/L என்னிடம் படித்த மாணவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: 0777 529113, 077 3618018

"நம்பிக்கையே வாழ்க்கை, வெற்றியே எனது குறிக்கோள்"



சுன்னாகத்தில்...

கணக்கீடு
A/L - 2009
ஆசிரியர்
திரு. விஜிரசன்
(B.B.A.Spl)
Sat, Sun - 9.30 a.m.
Note: [illegible]

விவேகானந்த கல்வி நிறுவனம்



வட்டு சிவன் தொலைத்தொடர்பகம்

Net Cafe

சிவன் கோயிலடி, வட்டு. மேற்கு, வட்டுக்கோட்டை.

தொ.பே.: 021 222 3734
060 2 212470
E-mail: vaddu_sivan@yahoo.com

பின்வரும் சேவைகளை பெற இன்றே நாடுங்கள்

* Browsig
* E-Mailing
* Net 2 Phone Calls
* Game & Entertainment
* Voice & Visual Chatting
* Printing
* Scaning
* Laminating
* CD Writing
* Photo Copy
* Tele Phone
* Fax


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவ[illegible] 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.01.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org